உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி	சித்தார்த்தி ௵ கார்த்திகை ௴ ௧௳	பகுதி
5	1919 ௵ நவம்பர் ௴ 16௳	5

கடவுள் வணக்கம்.

உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
ளூற்றென வெதும்பி யூற்ற
வூசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடி யாடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தெழுந் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானே யவானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தி யேத்தும்
கடன்மடை திறந்தனைய வன்பரன் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளி யையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக் கடவுளே.

எல்லாஞ் சிவன்செய லென்றறிந் தாலவ னின்னருளே
யல்லாற் புகலிடம் வேறுமுண் டோவது வேநிலையா
நில்லாயுன் ஞற்றமி யேற்குக் கதியுண்டிந் நீணிலத்திற்
பொல்லா மயக்கத்தி லாழ்ந்தாவ தென்னபுக னெஞ்சமே.

வையக மாதர் சுகத்தையும் பொன்னையு மாயைமல
மெய்யையு மெய்யென்று நின்னடியார் தம்விவே கத்தையு
மையமில் வீட்டையு மெய்ந்நூலை யும்பொய்யதா கவெண் ணும்
பொய்யர்தம் நட்பை விடுவதென் றோபரி பூரணமே.

ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ கார்த்திகைமீ" ௧௨

மானிட ஜன்மம்

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாகிய பகவானால் சிருட்டிக்கப்பட்ட எழுவகைத் தோற்றமாகிய பலவகை ஜன்மங்களிலும் மனித ஜன்மமே மிகச் சிறந்தது என்று சகல நூல்களும் கோஷிக்கின்றன. ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு மானிடருக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஆயினும் இத்தகைய மானிட ஜன்மமும், அநித்தியமும் துக்கமுமான தாகையால் இதை யடியோ டொழிக்கவே முயல வேண்டுமென்பதே நூல்களின் கூற்றும் அறிவாளிகளின் முயற்சியாகிய அனுபவமுமா யிருக்கிறது. ஒருபொருள் தகுதியுடையதல்லவென்றும் துக்கத்தை யளிக்கத் தக்கதென்றும், ஆகையால் இகழ்ந்து வெறுத்து அடியோடு ஒழிக்கத் தக்கதென்றும் ஆன்றோரால் தீர்மானிக்கப்பட் டிருக்கும்போது, அத்தகையபொருளை அதனிடத்திலுள்ள ஒரு குணம் பற்றி யாவற்றினும் சிலாக்கியமாய்க் கருதுவது ஒரு பக்கமிருப்பினும், அதனிடத்திலுள்ள கஷ்டங்களையும் துன்பங்களையும் நன்குணர்ந்து சிந்திப்பதே, அப்பொருளை வெறுத்து அதை யொழிப்பதற்கு வேண்டிய முயற்சி யெடுத்துக் கொள்வதற்குத் தகுதியான உணர்ச்சி யுண்டாகும்.

ஆகையால் இவ்வளவு சிறந்ததெனக் கூறப்படும் மானிட ஜன்மத்திலும், இதை நோக்க மிகவும் தாழ்ந்தவை யென இழித்துரைக்கப்படும் மிருக பட்சியாதி ஜன்மங்களிலும் உள்ள அனுகூலப்பிரதிகூலங்களையும் சுகதுக்காதிகளையும் ஒத்திட்டுப் பார்ப்பது அவசியமே யாகும். ஒருவன் தன்னைப்பற்றி சிலாக்கியமாகவும் பிறரைப் பற்றி இழிவாகவுமே கருதிக்கொண்டிருக்கிற வரையில் அகங்காரமும் தற்பெருமையும் அதிகரித்து அதனால் பிறகு துன்பமேயுறுவானென்பது உண்மை, அதைவிட்டுத் தன்னிடத்துள்ள குற்றங் குறைகள், துன்பங்கள் முதலியவற்றை உற்றுநோக்கி யுணர்வா

னேல் அகங்கார மடங்கித் தன்னில் தனக்கு வெறுப்பு தோன்றித் தான் என்ற அகமமதையற்று ஆண்டவனருளுக்குப் பாத்திரனுவான்.

இப்போது இம்மானிட ஜன்மம் தாயின் கருக்குழியில் ஓர் உருவமாய் உற்பத்தியாவது முதல் பிறகு அத்தேகத்தை விட்டு ஆன்மா பிரிகிற வரையில் அதன் அனுபவம் எப்படி யிருக்கிற தென்று கவனிப்போம்.

1. கருக்குழியில் தேகம் பூரண உருவடைந்து ஆன்மா அதில் வந்துசேர்வது முதல் கருப்பாசயப்பை முட்களப்போல் தேகத்தில் உறுத்துவதும், அங்குள்ள ஜலத்தில் அந்தரத்தில் கட்டப்பட்டுத் தொங்கிக்கொண்டிருப்பதால் அலை கடலில் தத்தளிப்பது போன்ற உணர்ச்சியுறுவதும், அங்குள்ள நீரின் வெப்பத்தைச் சகிக்க முடியாது வருந்துவதும், ஆகிய (பஞ்ச பூதங்களாலாகிய) ஐந்து விதத் துன்பங்களை யனுபவிப்பதாகவும், கடைசியில் பூமியில் ஜனிக்கவேண்டிய காலம் வந்த போது, ஒரு பெரிய மலையின் சிகரத்திலிருந்து தலைகீழாய்ப் பாதாளத்திற்குத் தள்ளப்படுவது போன்ற பயங்கரத்தையும், பிறகு நெருக்கமான துவாரத்தின்வழியே பூமிக்குவரும்போது சகிக்கொணு இம்சையடைவதால் மூர்ச்சையையும் அடைவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. மிருகமாதிகளுக்கும் கர்ப்ப வாசத்தில் இத்தகைய துன்பங்களின் உணர்ச்சியுண்டெனினும் மானிட ஜன்மம் அவற்றினும் சுகமுடைய தெனத் தோன்றவில்லை.

2. பூமியில் ஜனித்த பின்புள்ள நிலைமையைக் கவனிப்போம்.

குழந்தையாய்ப் பூமியில் ஜனித்த வுடனே பிறர் உதவிசெய்தாலன்றி அக்குழந்தை பிழைப்பதே யரிதாய் விடும். முதலாவது ஒருவர் கையில் எடுத்துப் பால் புகட்டவேண்டும் இதுமட்டுமல்ல, பிறந்த வுடனே ஸ்பரிச உணர்ச்சிதான் முதலில் தோன்றும். மற்றவை (காண்டல் கேட்டல் முதலியன) ஒவ்வொன்ருய்ப் பின்பே யுண்டாகின்றன. அந்தோ அக்குழவிப் பருவம் மிக்க கோரமானது. பகுத்தறி வில்லாத மிருகமாதிகளின் நிலைமையைவிடத் தாழ்ந்த நிலைமையெனக் கூறலாகும். உட்காரவாவது, எழுந்திருக்கவாவது, கேவலம் நகரவாவது முடியாது. இருந்த விடத்திலேயே மல ஜலங்களைக் கழித்துவிடும். யாராவது தன்னை யப்புறப்படுத்தித் தன் தேகத்தைச் சுத்தம் செய்தாலன்றி, அம்மல ஜலங்களிலேயே புரண்டு கொண்டு கிடக்கவேண்டும். மனித ஜன்மத்தினும் மிகத் தாழ்ந்த ஜன்மங்களாய்க் கருதப்படும் மிருகமாதிகளுக்கோ இத்தகைய நிலைமை யில்லை.

ஒருபசுவின் வயிற்றினின்று கன்றுவெளிவந்ததே, சற்றுநேரத்திற்குள் அது தானே எழுந்து தன் தாயின் பின் நடந்து செல்லச்

சக்தி யுடையதாயிருக்கிறது. தானே தன் தாயின் ஸ்தனத்தை யணுகிப் பால் அருந்துகிறது. தன்னிஷ்டப்படி இடம் பெயர்ந்து செல்கிறது. தாய் அழைத்தால் அத் தொனியைக் கேட்டு அதன ருகில் போய்ச் சேர்கிறது. பிறந்தது முதலே ஐம்புல நுகர்ச்சியும் அதற்குண்டு. இன்ன ஜந்து தனக்கு விரோதி யென்றறிந்து கொள்கிறது. ஆபத்து நேர்வதாயின் அம்மா வென்றலறிக்கொண்டு தன் தாய்க்கு அறிக்கை யிடுவதோடு, அதனிடம் ஓடிவிடச் சக்தி யுடையதா யிருக்கிறது. தன் தாயே காலமறிந்து தனக்குப் பாலூட்டி வளர்க்கவேண்டு மென்பதும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத் திற்குச் செல்ல வேண்டுமாயின் ஒருவர் தூக்கிச் செல்ல வேண்டு மென்பதுமாகிய அவசியம் அதற்கு எள்ளளவுமில்லை. உயர்ந்த ஜன்மமாகிய மானிடக் குழவியோ, பிறர் உதவியின்றேல் குழவிக் கல் போன்றே இருக்கு மிடத்திலேயே புரண்டு கொண்டு கிடக்க வேண்டியதே. அந்த நிலைமையில், கையில் சிக்கினுல் தன் மலத்தை யும் தன் வாயில் வைத்துக்கொள்ளும். தன்னைக் கொல்லத்தக்க துஷ்டப் பிராணிகள் தன்னருகில் வரினும் அச்சம்பவத்தை யறி ந்து கொள்ளும் அறிவு அதற்கில்லை. அந்தோ! என்ன பரிதாப மான நிலைமை. இந்த நிலைமையில் மானிட ஜன்மத்தின் அறிவைக் காட்டிலும் மிருகஜன்மத்தின் அறிவே விசேடமா யிருக்கிறதென்று தோன்றுகிறது.

3. இனிப் பிறந்தது முதல் சுமார் ஐந்தாறு வயது வரையில் எப் படிப்பட்ட நிலைமை யென்று கவனிப்போம்.

மானிட ஜன்மம் அறிவுடையதெனச் சிலாகித்துக் கூறப்படி னும் இப் பருவத்தில் பிறர் தனக்குச் செய்வது நன்மைக் கென் றும் தீமைக் கென்றும் அறிந்து கொள்ளும் சக்தி சற்றுமில்லை. தாய் முதலியவர்கள் எவ்வளவோ அன்போடு ஸ்நானம் செய்வித் தால், குழந்தையதைப் பெரிய துக்கசம்பவமாகவே மிகக் கஷ்டத் தோடு அனுபவிக்கிறது. ஆகாரம் உண்பதும், நோய்க்கு ஔடதம் அருந்துவதும் யாவும் அதற்கு மிக்க துக்க கரமான அனுபவங் களே. இப்பண்டம் தனக்குச் சுகமளிக்கத்தக்கது, இது அசுகத்தை யுண்டாக்கத் தக்கது என்று தெரிந்து கொள்ளும் அறிவில்லாத தால், தான் இச்சித்த ஒரு கெட்ட பண்டத்தை வாங்கி யளிக்கத் தாயார் முதலிய யாவரேனும் மறுத்தால் அந்தோ அதுபடும் துய ரம் மிக்க கோரமானதே. இன்னும் ஒருவர் தன்னைத் தூக்கிக் கொண்டுலவ வேண்டுமென்று விரும்பி அதற்கு அழுதல் முதலிய பல துன்பங்களை யறிவின்மையா லனுபவிக்கிறது. விரிக்கின் பெரு கும்.

ஒரு மிருகமோ அத்தகைய பருவத்திலும் ஒருவர் உதவியு மின்றித் தனக்குத் தகுதியான ஆகாரத்தை யறிந்து தானே யுண்

ணும். முகர்ந்து பார்ப்பதினுலேயே ஒரு வஸ்து தனக்குத் தகுதி யான உணவல்ல வென்றுணர்ந்து அதைத் தின்னுது நீக்கிவிடும் சக்தியுடையதா யிருக்கிறது.

4. இதற்குமேல் அறிவு விளங்கும் பருவம் வரையிலாவது நிம்மதி யாகவும் சந்தோஷ மாகவு மிருக்கிறதா. இல்லை. பள்ளிக் குச் செல்லப்பயம். கல்விகற்பதெனின் எட்டிக்கனியை விழு ங்குவதினும் மிக்க வெறுப்பே. உபாத்தியாயரைக் கண்டால் ஒரு புலியைக்காண்பது போலிருக்கிறது. இன்றைக்குப் பள் ளிக்கூடத்திற்குச் செல்லவேண்டா மென்ருல் மிக்க ஆனந் தமே. உபாத்தியாயர் வியாதியுற்றிருக்கிரு ரென்ருல் அவ் வியாதி சட்டென்று நீங்கி அவர் பாடசாலைக்கு வரா வண் ணம், அதுநீடித்திருக்க வேண்டு மென்று பிரார்த்தனை செய்ய வேண்டியதே. கண்ணுற்கண்டு தான் இச்சிப்ப வற்றை யெல் லாம் அடையவிரும்பி, அவை கிடைக்காவிட்டால் துக்கித்தல், அவற்றிற் காகப் பெற்றோர்க்கு வருத்த மளித்தல், மற்ற பிள்ளைகளோடு சண்டையிட்டு அடிபட்டுக் கொள்ளல், செய் யத்தகாதன வற்றைச் செய்து உபாத்தியாயரும் பெற்ருேரும் அளிக்கும் தண்டனைகளை யனுபவித்தல், தன் பிரியப்படி நடக்க விடப்படாமல் பாதுகாக்கப்படுவதற்காக வருந்துதல் முதலிய பல துன்பங்களை யனுபவிப்பது பிரத்தியட்ச அனுப வம். அந்தோ நன்மை தீமையை யறியும் அறிவில்லாத இந்த நிலைமை துக்ககரமானதே. மிருகமாதிகளுக்கோ இத்தகைய ஒரு துன்பமுமில்லை.

5. இதன் பின் சற்று அறிவுவிளங்கும் பருவம் வந்தால், அப் போது நாம் கல்விகற்க வேண்டியதே, கற்ருல்தான் பணம் சம்பாதிக்கலாம் என்ற உணர்ச்சியுண்டாகிறது. அப்போது தன் பிரியப்படி உயர்தரக் கல்விகற்க இடையூறு நேர்ந்தால், அதாவது பாடசாலைச் சம்பளம், புத்தகங்கள் முதலியவை, வெளியூரிற் சென்று கல்விகற்க நேர்ந்தால் ஆகாரம் முதலி யவை இவைகட்கு வேண்டிய பொருள் அளிக்கப் பெற்ருேர் சக்தியற்றவராகவும், உதவி செய்ய வேருெருவரும் இல்லாத தாகவு மிருந்தால், அந்தோ பெருந் துக்கத்தை யனுபவிக்க வேண்டும். பெற்ருேர் சக்தியற்றவராயினும் சில சமயங்களில் அன்னியர் உதவி பெற்று அவர்கள் ஆதரணையிற் கல்விகற்க நேர்வதுமுண்டு. ஆனுல் அப்போதும் பெரும்பாலும் பல மன வருத்தங்கள் நேர்ந்து அவற்றைப் பொறுமையோடு சகித்துக் கொண்டே கல்வியை யடைய வேண்டும்.

6. கல்வி கற்று முடியும் சமயம் வயதும் முதிர்ந்து யௌவனப் பரு வம் வருகிறது. இதற் கிடையிலேயே அனேக உலக விஷயங்

கள் மனதிற்கு விளங்கி விடுகிறது. நாம் நன்ருய்ப் படித்தால் அதிக பணம் சம்பாதிக்கலாம், இன்னின்ன உயர்பதவிகளை யடையலாம், நாமும்கலியாணம் செய்துகொள்வோம், புத்திர சம்பத்தையைடவோம் என்றெண்ணுதல் முதலிய எல்லா விஷயங்களும் தெரிந்துவிடுகின்றன. சரியான யௌவனம் வந்ததே உலகபோகங்களை யனுபவிக்க வேண்டுமென்கிற ஆவலுண்டாய் விடுகிறது அவற்றில் பெண்சுகத்தை யனுபவிக்க வேண்டு மென்கிற காம இச்சை யுண்டானதே மனோவேதனை யதிகமாகிறது. அது மிக்க கொடிய அவாவானதால் மனம் தீயில் வாட்டப்படுவது போன்ற கொடிய வேதனையை யுண்டாக்கி விடுகிறது. அந்த விச்சையைத் திருப்தி செய்துக் கொள்ள வேண்டுமாயின் பொருட் செலவு செய்வதோடு பல கஷ்டமான பிரயத்தனங்களு மெடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் "காமத்தின் கண் இச்சையுண்டாயின் கொள்ளும் பெண்டுடன் கலவிசெய்" என்றபடி, தன்குலத்தில் உள்ள தகுதியான ஒரு கன்னிகையை வேதவிதிப்படி மணம் புரியவேண்டும். அப்படிச் செய்யாது சொல்பபொருளைக் கொடுத்து விலைமாதரைச் சேர்தல், தான் அக்கினிசாட்சியாக மணந்த மாதன்றி மற்ற அன்னியமாதரை யிச்சித்தல் முதலிய விஷயங்களில் பிரவேசிப்பானுயின் பாதகத்திற் காளாவதோடு இம்மையில் பொருள் நஷ்டம், அபகீர்த்தி, தண்டனை, வியாதி முதலிய பல துன்பங்களுக்கும் ஆளாவான். அவ்வாறு விதிப்படி யொருகன்னிகையை மணந்தபின் தன் மிருக இச்சையாகிய ஒன்றைத் திருப்திசெய்துக் கொள்கிருனெனினும் அதனுல் பிறகு பூரண சுகத்தையே யனுபவிக்கிருன் என்ற நிச்சயமில்லை. அந்த ஒரு சிறு இன்பத்திற்கு வைத்த இச்சையே பிறகு மரணபரியந்தம் தீராக்கவலைக்கும், பலவிதக்கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும், சகிக்கொணு மனோவேதனைக்கும் காரணமாகிவிடுகிறது. அம்மனைவி உத்தமகுணங்கள் வாய்ந்த கற்பரசியா யிராவிடின் இன்னும் இவன் வேதனைக்கு ஓர் அளவேயில்லை. அவற்றையெல்லாம் விரிக்கின் மிகப் பெருகும்.

மிருகஜன்மமோ அக்காம இச்சையைத் தனக்கு எதிர்ப்பட்ட பெண் மிருகத்தோடுகூடி ஒரு கவலையு மின்றித் திருப்தி செய்து கொள்கிறது. அச்சுக அனுபவம் என்றவரையில் இரண்டு ஜன்மங்களின் அனுபவமும் ஒன்றே. ஒரு வித்தியாசமு மில்லை. மிருகம் அதைச் சுலபமாய்க் கஷ்டமாவது கவலையாவதின்றி நிறைவேற்றிக் கொள்கிறது. மனிதனே அதற்கு வேண்டிய பல உபகரணங்களைச் சம்பாதிக்க மிக்க கஷ்டமும் கவலையும் அனுபவித்த பின் அதை நிறை வேற்றிக் கொள்கிருன். இதுதான் இருவர் அனுபவத்திற்குமுள்ள வித்தியாசம். (தொடரும்.)

பழக்கங்கள்

மனிதன், பழக்கங்கள் என்ற கருவிகளா லமைக்கப்பட்ட எந்திரம் என்றும், பழக்கம் இரண்டாவது இயற்கையென்றும் சொல்லப்படுகிறது. ஒருவன் நற்பழக்கத்தாலும் நன்னடையாலும் நல்லவனாகிறான்; தீப்பழக் கத்தாலும், தீய நடையாலும் கெட்டவனாகிறான். நற்குணமும், தீக்குண மும் முறையே நன்னடையாலும், தீய நடையாலு முண்டாகின்றன.

பழக்கங்கள்:—அதிலும் தீர்ப்பழக்கங்கள் சீக்கிரத்திலுண்டாகின்றன. இன்றைக்கு அற்பமாய்க் காணப்படும் ஒரு செய்கை சீக்கிரத்தில் கப்பலின் வடக்கயிற்றுப் பலத்தைக்கொண்டு நம்மை இறுகப்பிடித்துக் கட்டிவிடு கிறது. இவ்வடமே ஒரு காலத்தில் மிகநுட்பமான நூலிழைகளால் திரிக்கப் பட்டதன்றோ? என்றாலும் அதற்கு யானையினும் லக்ஷமடங்கு அதிகபல முள்ள பிரமாண்டமான பெரிய கப்பலும் தலை வணங்கி நிற்கவில்லையா? உண்டாய்விட்ட பழக்கங்களை ஒழிப்பது அசாத்தியம். அதிலும் தீய பழக் கங்களை ஒழிப்பது மிகவும் அசாத்தியம். பழக்கமாகிய மலையினுச்சியிலுள்ள ஒரு பெரிய உருண்டைக் கல்லை ஒரு சிறு குழந்தையும் உருட்டி விடலாம்; உருண்டு மும்முரமாய் கீழேவரும்போது அதைத்தடுத்து நிறுத்த ஒருபெரிய பூதத்தாலு முடியுமா?

பழக்கங்கள் இம்மையிலும் மறுமையிலும் நம்மைத் தொடர்கின்றன. ஒருவனது நிழல் அவன் எவ்வளவு தூரஞ் சென்றாலும் அவனை விடாமல் அவன் சென்ற விடமெல்லாம் தானுஞ் சென்றுகொண்டே வந்து அவன் பாதத்திற் றங்குவது தவறாது போல, ஒருவன் பழக்கமும், தீச்செய்கை யும் அவனுயிர் எவ்வளவு தூரஞ் சென்றாலும் அவ்வுயிரை விடாமல் அது சென்ற விட மெல்லாஞ் சென்றுகொண்டே வந்து அவ்வுயிரை வருத் தும்.

> "தீயவை செய்தார் கெடுதல் நிழல்றன்னை
> வீயாது அடிஉறைந் தற்று."

இதன் பொருள்:—

பிறர்க்குத் தீவினை செய்தார் கெடுதல் (எப்படியெனின்), ஒருவன் நிழல் அவன் நேராகப் போயும் அவனை விடாது வந்து அவன் அடியின் கண் தங்கியது போன்றது. இப்படியே ஒருவன் நற்பழக்கத்தால் செய்யும் நல்வினை அவனுயிர் செல்லுமிடமெங்கும் சென்று அவ்வுயிர்க்கு நன்மை பயக்கும். நற்பழக்கங்களால் நல்வினையும், நல்வினையால் இம்மையில் சுக மும், மறுமையில் மோக்ஷமும் ஒருவனடைகிறான். தீய பழக்கங்களால் தீவினையும், தீவினையால் இம்மையில் துன்பமும், மறுமையில் நரகமும் அடைகிறான்.

பழக்கங்கள் சிறுவயதிலே உண்டாகிறபடியால் அப் பருவத்தில் நற் பழக்கங்களை யுண்டாக்க வேண்டும். நற் பழக்கங்களில் எதுவானாலும் சரி இது நமக்குண்டாவது கஷ்டமென்று நாம் அஞ்சவேண்டுவதில்லை. எவ்வ ளவு கடினமான தாகவும் தொந்திரவான தாகவும் தோன்றின போதிலும் சரி, அப்படித்தோன்றும் நற் செய்கையை ஒவ்வொரு நாளும் ஒரே குறித்த காலத்தில் விடாமல் சில நாட்கள் செய்து வருவோ மானால் அது நம் பழக் கத்தின்கீழ் வந்துவிடும். பிறகு நாம் அச் செய்கையை யாதொரு முயற்சியு மின்றி உற்சாகத்தோடு செய்ய வல்லவராவோம்.

நம்மெல்லோருக்கும் முக்கியமாக வேண்டிய சில நற்பழக்கங்களையும் அவைகளை யடையும் மார்க்கங்களையும் பற்றிச் சிறிது கூறுவாம்:—

(முதலாவது) ஒவ்வோரு நாளும் நாம் செய்யவேண்டிய காரியங்களை முன்னதாகவே குறித்து வைக்க வேண்டும். இரவில் படுக்கு முன்னமே அடுத்த நாள் நாம் செய்து முடிக்க வேண்டிய காரியங்களை நன்ருய் யோசித்து அவைகளை நாமுட்காரும் இடத்திற்கு முன்னே சுவரில் தொங்க விட்டிருக்கும் ஒரு பலகையிலாவது, ஒரு சிறிய காகிதத் துண்டிலாவது குறித்து வைக்க வேண்டும். அடுத்த நாள் படுக்கையைவிட் டெழுந்ததும் அப்பலகையை முதலிற் பார்த்துவிட்டு, பிறகு அக்காரியங்களைக்கிரமப்படி செய்ய ஆரம்பிக்க வேண்டும். இப்படிக்குறித்து வைக்காமற் போனல் இன்ன தொழில் முதலில் செய்வது, இன்னது பின்னல் செய்வதென்று தோன்ருமல் ஒருவன் கண்டதை ஆரம்பித்து அதைக் கொஞ்சம் செய்ததும் அதை விட்டுவிட்டு, அதினும் அதிக முக்கியமாக அப்போது தோன்றும் மற்ளுெரு காரியத்தைச் செய்யப்புகுவான். அப்படித் தான் எடுத்துக் கொண்ட முதற்காரியத்தைச் செய்து முடித்த போதிலும், பிறகு தானின்னது செய்ய வேண்டிய தென்று ஒரு கட்டாய மில்லாததால், காலத்தை வீணுய்ப் போக்கக் கூடும். ஒரு ஊரிலிருந்து இன்னுெரு ஊருக்குப் போகப் புறப்படும் ஒரு வழிப்பிரயாணி இன்னின்ன வழி போனல்தான் கோரிய ஊருக்குச் சுலபமாய்ப்போய்ச்சேரலாமென்று முன்னதாகவே தான்போகவேண்டிய வழிகளை அறிந்து கொள்வானல்லவா? அப்படி அறிந்து கொள்ளாதவன் வழிதப்பி வழிப் போவதால் கோரிய இடம் போய்ச் சேருவது கடினமல்லவா? காரியங்களை முன் குறித்து வைப்பதனல் ஒருகாரிய முடிந்ததும் மற்ளுெரு காரியத்தை உடனே ஆரம்பிக்கலாம். அப்படிக் குறித்து வைக்காமற்போனல், முதற்காரியம் முடிந்தபிறகு செய்யவேண்டியது இதுவென்று ஏற்படுவதற்கு நெடுநேரமாகும். அப்படி ஏதாவது காரிய மேற்பட்ட போதிலும் சோம்பலினல் அதை அடுத்தநாள் செய்யலா மென்று யோசிக்கக் கூடும். மேற்கூறியபடி காரியங்களை முன்னதாகக் குறித்து வைப்பதுடன் ஒவ்வொரு நாளிரவும் படுக்கும்போது அக்காரியங்களை யெல்லாம் செய்துமுடித்தோமா? ஏன் நாம்செய்ய வேண்டுமென்றவைகளை யெல்லாம் பூர்த்தியாகச் செய்யாமல் சிலவற்றை செய்யத் தவறினேம்? அடுத்த நாளில் இப்படிச்செய்யக் கூடாது என்று கவனிக்க வேண்டும். மேற்கூறியபடி ஒருவன் செய்ய வேண்டிய தொழில்களை முன்னதாகக் குறித்து வைப்பதும் அதன்படி பிறகு நடந்து கொள்வதும், குறித்துவைத்த காரியங்களெல்லாம் சரியாய் முடிந்தனவா என்று கடைசியில் ஆராய்ந்து பார்த்தலும் முதல் நாலைந்து நாள் கஷ்டமாகத் தோன்றும்.

பிறகு பழக்கத்தின் கீழ் வந்துவிட அதுசுலபமாகவே தோன்றும். இப்பழக்கத்தை யுடைய ஒவ்வொருவனும் இவ்வாழ்நாட்களிலடையும் பயன்கள் மற்றையவ னடையும் பயன்களைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகமாகும். இச் சஞ்சிகை வாசிக்கும் மாணவரும் மற்றவரும் இதைப்படிக்கும் அந்நாளே இப்பழக்கத்தை ஆரம்பம் செய்வார்களாயின் கூடிய சீக்கிரத்தில் அதனலுண்டாகும் நன்மையைப் பிரத்தியக்ஷமாகக் காண்பார்கள்.

வே. பா. துரைசாமி முதலியார், பி. ஏ.,
மதராஸ்.

நமது கடமை

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது." (குறள்)

நம்மால் எவ்வகையிலும் தகுந்தமாறுதவி செய்ய முடியாத பேருத வியை நமக்குச் செய்பவர்கள் பலருண்டு; அத்தகையோரில் நம் ஆனந்தன் ஒருவன். சிறியவர்களும், பெரியவர்களுமாக வுள்ள சுமார் பத்தாயிரம் நண் பர்களை யுடைய நம் ஆனந்தன் தன்னால் இயன்றவளவு தன் நண்பர்களுக்கு மாதந்தோறும் இன்பம், சொற் சுவை, பொருட்சுவையுடன்கூடிய பேரின் பம்—கடந்த ஐந்து வருடங்களாக அளித்து வருகிறான். அவ்வானந்தனை நாம் ஒவ்வொருவரும் அன்புடன் மாதம் தோறும் வரவேற்கிறோம். எனி னும், அவன் கோரும் சிறியதோர் உதவி நம்மால் செய்யக்கூடியதாக இருந் தும்—நாம் செய்யாமலிருந்து வருகிறோம். நம் ஆனந்தன் தன் நண்பர்கள் பத்தாயிரம் பேர்களையும், இன்னம் தனக்குச் சிநேகிதர்களைச் சேர்த்து வைக்கும்படிப் பன்முறையும் நம்மிடம் குறைகூறி வந்திருக்கிறான். அவ னது மனம் களிப்பை யடைய நாம் உதவி செய்யாமல், அவனால் மட்டும் மாதம் தோறும் நாமாத்திரம் சந்தோடத்தை யனுபவித்து வருகிறோம். உலக வனுபவத்தில் பிறருக்கு ஒருவன் ஓர் உபகாரம் செய்தானாகில்,

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" (குறள்)

என்று நினைத்துச் சமயம் வாய்ந்தபொழுது பிரதியுபகாரம் செய்வதல் லவோ நீதி.

மேலும் நாம் செய்யப்போகும் இவ்வுபகாரம் நமது ஆனந்தனுக்கென்று கருதப்படுவதாயினும், உண்மையில் அது நமது தாய்ப்பாஷையின் அபிவிர்த் திக்கும், நம் தாய்நாட்டின் க்ஷேமத்திற்காகவும் செய்யும் பொதுநலக் கைங் கரியமாகிய பெரும் புண்ணியச் செயலே யாகும். ஆகையால் அத்தகைய அவசியமான உதவியைச் செவ்வனே செய்ய வேண்டியது நம் கடமை யல் லவா?

இனி நாம் செய்யவேண்டிய தென்னவென்று கூறுவாம். ஆனந்தன் கோரும் உதவி—அதிக பெரிதல்ல—சிறியதோர் உதவி யொன்றைச் சந்தா தாரராகிய ஒவ்வொருவரும் செய்து கொடுக்க வேண்டும். அதாவது:— நம் ஆனந்தன் கோருவது: "தனக்கு இப்பொழுது இருப்பதைவிட இன் னும் சந்தாதாரர்கள் வேண்டும்" என்பதே.

ஆனந்தனுக்கு நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிநேகிதரைச் சிநே கம் செய்து வைப்பது ஒருபெரிய காரிய மல்லவே! இவ்வுதவியைச் செய்து ஆனந்தனைச் சந்தோஷப்படுத்த அனைவரும் முன் வரவேண்டும் என்பதே நமது பிரார்த்தனை.

நேயர்களே! ஆனந்தபோதினியிலிருந்து வெளிவரும் அரிய விஷயங் களையும், நம் தாய்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், தாய் நாட்டின் முன் னேற்றத்தையும் உத்தேசித்து ஒவ்வொருவரும் நமது ஆனந்தபோதினிக்கு இப்பேருதவியைச் செய்யவேண்டுமாய் எல்லாம் வல்ல கருணாநிதியை மன தாரப் பிரார்த்திக்கின்றோம். சுபம்! சுபம்!!

K. M. நாகராஜன், கீழவெடயல்,
திரிச்சிரை போஸ்ட்.

செய்—விடு

——)(*)(——

இவ்விரண்டு வார்த்தைகளையும் சேர்த்து "செய், விடு" என்று சில சமயங்களில் நாம் பேசுவதில் உபயோகிக்கிறோம். ஆயினும், இவ்வார்த்தைகளின் அர்த்தம் நம்மில் பெரும்பாலர்க்குப் பூரணமாய் விளங்குவதில்லை. அவர்கள் இவ்வார்த்தையை ஓர் பரிஹாஸ வார்த்தை என வெண்ணிச் சந்தர்ப்பம் வாய்ந்த பொழுது உபயோகிக்கிறார்கள். இவ்விரண்டு வார்த்தைகளையும் கவனிக்கும் பொழுது, அவற்றின் அர்த்தம் "செய்யத் தக்கனவற்றைச் செய்" அதாவது "நல்ல காரியத்தைச் செய்," "செய்யத் தகாதனவற்றைச் செய்யாது விடு" அதாவது "கெட்ட காரியத்தை விட்டு விடு" என்று விளங்குகிறது வாஸ்தவமே. எப்பொழுதும் நல்ல காரியத்தைச் செய்து பரஹிதத்தைக் கோரவேண்டும். ஆஸ்திகன் இதை யுணர்ந்தொழுகுவான். கடவுள் ஒருவர் உண்டென்பதை நம்பி அவரிடம் அன்பு வைத்து நடப்பவன் ஆஸ்திகன் ஆகிறான். அதை யறியாதவன்தான் நாஸ்திகன். நற்கருமங்கள் நாஸ்திகர் மனதில் படுவதில்லை. தெய்வம் இவர்களுக்கில்லை. ஜீவ இம்சை இவர்களுக்கு ஓர் விளையாட்டு. இவ்விதம் செய்பவர்களுக்கு அவித்தைதான் (அஞ்ஞானம்) காரணமாகிறது.

வித்யார்த்திகள் பாபங்களையும், அஞ்ஞானத்தையும் நிவர்த்தித்துக் கொள்கிறார்கள். உண்மையை அறிந்து பரஹிதத்திற் குரியவற்றைச் செய்ய வேண்டும்.

> " நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
> பெருமை யுடைத் திவ்வுலகு." (குறள்)

என்றபடி இன்றிருப்பவர் நாளை இல்லை. இன்றில்லாதவர் நாளை குழந்தை யுருவாய் வருவார். தவிர, நான்மணிக்கடிகையில்,

> பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங் கால்—
> நில்லெனவு நில்லா வுயிரனைத்தும் ... ...

என்று கூறியிருக்கிறபடி அவ்விதம் வருவதும் போவதும் நம் ஆட்சியில் இல்லை. ஆகையால் பிறர் க்ஷேமத்தின் பொருட்டு நற்கருமத்தைச் செய்து, பரிசுத்த இருதயத்தை யடைய முயலவேண்டும். ஒருவன் தன் கர்மத்தினாலேயே இந்திரனாகிறான். தன் கர்மத்தினாலேயே ஜனன மரண மற்றவனாகிறான். தன் கர்மத்தினால் மோக்ஷத்தை நிச்சயமாய் அடையலாம். கர்மத்தினால் நால்வித முத்தியையும் பெற வழியுண்டு. இதற்குப் பிரமாணம் தேவிபாகவதத்தில் 9 வது கண்டம் 27 வது அத்தியாயத்தில் காணலாம்.

இரும்பை இரும்பால் திருத்துவது போல், நம் அசுத்தமனதைச் சன்மார்க்கத்தில் பிரவேசிக்கச் செய்து துர்க்கிரியைகளை யடியோடொழிக்க வேண்டும். அப்படிச்செய்ய முன் வரும்பொழுது சுயநலம் என்னும் பிசாசை ஓட்டவேண்டும். தெய்வபக்தியென்பது நல்ல காரியத்தைச் செய்ய விரும்பும் ஒவ்வொருவரிடமும் தானாகவே வந்து சேரும். இன்றிந்த ஜன்மம் நீங்கின் நாளை வேறெந்த ஜன்மம் கிடைக்குமோ நமக்குத் தெரியாது. பாப புண்ணியங்களுக்குத் தகுந்தபடி ஜனனமுண்டு. ஆனால் ஆறறிவுடைய இம் மானிட ஜன்மம் கிடைக்கு மென்பது நிச்சயமல்ல. ஆகையால் இச் சென்

மத்திலேயே கடவுளை வந்தனை வழிபாடுகளால் துதித்து மறு ஜனனத்தில் மறவா திருக்கும் சாதனத்தைப் பெற வேண்டும்.

“புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்.”

என அப்பர் அருளினார்.

ஆகையால் “நாம் எப்போதும் சற் கருமங்களையே செய்ய வேண்டும். துர்க்கருமங்களை யடியோடு விலக்க வேண்டும்” என்ற நிர்ணயத்தை மறவாது மனதில் வைத்து நடக்கவேண்டும். அப்போது அப்பரமன் நமக்கருள் புரிவார்.

ஓம் தத்ஸத்.

K. M. நாகராஜன், கீழவெடயல்,
திரிச்சிரை போஸ்ட்.

நித்தியவிதி—பேரிரவு

நித்திரை செய்யுங் காலத்தில் கையையும் காலையும் நன்றாய்க் கழுவிக் கொள்ள வேண்டும். மனதில் கவலையொன்றையும் வைக்கக்கூடாது. தரையிலும் தனிப் பலகையிலும் படுக்கக்கூடாது. காற்றே யில்லாத இடத்திலும், அதிகக் காற்றுள்ள இடத்திலும் மேற்கூறை யில்லாமல் திறந்திருக்குமிடத்திலும், கொசுகு மூட்டுப்பூச்சிகள் உள்ள விடத்திலும் படுக்கக்கூடாது. பலருடன்சேர்ந்து படுப்பதும், பிறர்படுத்த படுக்கையிற் படுப்பதுங் கூடா. படுத்தற்குரிய படுக்கை பிராணிஜம், ஔஷதம், நிஸர்க்கம் என மூவகைப்படு மெனவும், பிராணிஜம் என்பது பட்டு, தோல், கம்பளமாதிய வெனவும், ஔஷத மென்பது கோரை, புல் முதலியவற்றாற் செய்யப்படுவன வெனவும், நிஸர்க்கம் என்பது புல்நிறைந்த பூமி, கொடிசூழ்ந்தடர்ந்த இடமெனவும், இவற்றுள் நிஸர்க்கமென்பது சந்நியாசிகளுக்குத் தகுதியுடையது, கிருகஸ்தர்களுக்காகாதது எனவும், பிரமசாரி வானப்பிரஸ்தர்கள் அகப்பட்ட தெதுவோ அதை உபயோகிக்கலா மெனவும், கிருகஸ்தர்கள் ஔஷதமென்கிற கோரை முதலியவற்றாலாகிய படுக்கையையே உபயோகிக்கவேண்டு மெனவும், விரதம் முதலிய காலங்களில் பிராணிஜம் என்கிற தோலை உபயோகப் படுத்தலா மெனவும், பட்டை ஆடையாக மாத்திர முபயோகிக்கலாமே யன்றிப் படுக்க உபயோகிக்கக் கூடாதெனவும் வைத்தியநூல்கள் விரித்துக் கூறுகின்றன. தோல் என்பது கிருஷ்ணாஜினம், புலித்தோல் முதலியன. இவ்வாறு தக்கபடுக்கையைச் சம்பாதித்து மற்றவர் படுக்கையோடு கலவாமல் தனியாகவே வைத்துக் கொள்ள வேண்டும். அண்ணன், தம்பி, மகன், மகள், தாய், பிதா இவர்கள் படுக்கையோடு கூடவும் கலந்திருக்கக்கூடாது. கலந்திருந்தால் பலவகை நோய்களுண்டாகும்.

ஒருவர் படுத்த படுக்கையில் அவரது சரீரமலம் அவசியம் சம்பந்தப்படும். நித்திரை காலத்திலுண்டாகும் வெயர்வை மூலமாகச் சரீரமலம் அவசியம் வெளிப்படும். அது படுக்கையிற் சம்பந்தித்து அதை அசுத்தமாக்கிவிடும். அன்றியும் அது உலரவே விஷமாய்விடும். அதை நாம் படுக்கையாற் கண்டுகொள்ள முடியாது. ஆயினும் ஒருவர் உட்கார்ந்து எழுந்திருந்த தரையினால் உணரலாம். அவ்விடம் சரீர ஆவியால் நிறைந்திருப்பது பிரத்தியட்ச மல்லவா! படுக்கையும் அவ்வாறேயென் றூகித்தறியத்தக்கது. ஆதலாற்றான் பிரஸவகிரகத்தில் உபயோகித்ததும், பிணமிருந்ததும், கிழிந்ததும், புழுதி நிறைந்ததும், குழந்தைகள் படுத்ததும், நீசத்துரோகிகள்

உபயோகித்ததும், பிறர் படுத்ததுமான படுக்கைகளிற் படுக்கக்கூடாது என்று வைத்தியநூல் கட்டளை யிட்டது. அன்றியும் இவைகளைக் கையால் தொடுவதும் தகாதென்றும், தொடநேர்ந்தால் உடனே ஸ்நானம் செய்ய வேண்டு மென்றும் விதி கூறப்பட்டது. ஈரவஸ்திரத்துடனும், நிர்வாண மாயும் படுக்கக்கூடாது. சொறிசிரங்கு, அபஸ்மாரம், ஜுரம், குஷ்டம், சுவாசகாசம், க்ஷயம் இவ்வியாதி யுள்ளவர்கள் படுத்த படுக்கையிலாவது, இவர்களுடன் ஓர் அறையிலாவது படுக்கக்கூடாது. கூடியவரையில் உயர மான இடங்களில் படுக்கவேண்டுமென்று கூறியது. உயரமான இடமாவது கட்டில், விசிபலகை முதலியவையாம். பூமியிற் சம்பந்தப்படாம லிருக்கிற மேன்மாடியுமாம். மேல்மாடியிற் கட்டிலில் படுத்தால் அதிக நன்மையாம். பஞ்சு, புல், பட்டு, தோல் முதலியவற்றாலான மெத்தை விசேஷம். மூங்கில் பிரம்பு, தேங்காய்நார்க்கயிறு முதலியவற்றாலான மஞ்சம் மிகவும் சிலாக் கியமாம். இவ்வகைக் கட்டிலில் பஞ்சிட்ட மெத்தையில் படுப்பது யாவருக் கும் நன்மை செய்யும். கட்டில் கிடைக்கப் பெறாதவர் கோரை முதலிய வற்றாற் செய்த பாயிற் படுக்கவேண்டும். மரக்கட்டில்களும், அத்தி, அரசு, இச்சி, நாவல், ஆல் முதலிய மரப்பலகைகளாற் செய்தவைகளும் கூடா. ஏனெனில், அரசில் அக்கினிக்கூறு அதிக மாதலால் உஷ்ணமிகும். அத்தி, நாவல்களிற் குளிர்ச்சி யதிகம்; ஆல் வாயுவை விருத்தியாக்கும்; இச்சியிற் பித்தமதிகம்; ஆதலா லிவ்வகை மரப் பலகைகளாற் செய்யப்பட்ட படுக்கைகளை விலக்கவேண்டு மென்று வைத்தியநூல்கள் விதித்தன.

படுக்கும்போது கைகால்களை நன்றாய்க்கழுவிக்கொண்டு படுக்கவேண் டும். கால்களிற் புழுதியிருக்கக்கூடாது. ஏனெனில் பகற் காலத்தில் தொழில் முயற்சியால் அலைந்து திரியுங் கால்களினின்றும் வெயர்வைவெளிப் படுவதில்லை. இரவில் களைப்பாறத் துயில் கொள்ளும் பொழுதிலேயே வெளிப்படவேண்டும். அவ்வுள்ளங்கால் புழுதியால் மூடியிருக்குமாயின் வெயர்வை வெளிப்படாது. அதனால் கீல்வாதம் முதலிய ரோகங்களும் குதிப்படுவனாதிகளும் உண்டாதற் கிடமாம். ஆதலால் கால்களை நன்றாய்க் கழுவிச் சுத்தி செய்துகொண்டே படுக்கவேண்டும். கைகளுமவ்வாறே யாம். படுக்கும்போது கிழக்கிலாவது, தெற்கிலாவது தலை வைத்துப் படு க்க வேண்டும். வடக்கிலும் மேற்கிலும் தலை வைத்துப்படுக்கலாகாதென்று கூறுவர் மேலோர். ஒரு சாரார் தன்னூரில் கிழக்கிலும் வழிப்பிரயாணத் தில் மேற்கிலும், வேட்டகத்தில் தெற்கிலும் தலைவைத்துப் படுக்கலா மென வும் "வாழாது வாழ்ந்தாலும் வடக்கில் தலைவைத்துப் படுக்கலாகாது" என வும் கூறுவர். எல்லாராலும் வடக்குத்திசை விலக்கப்பட்டது. அதன் காரணம் வடதிசையிலிருந்து தென்றிசை நோக்கி மஹா வேகமாய்ச் செல் லும் பூமியின் மஹா சக்தி மூளையின் ஆற்றலை அபகரிக்கு மென்பதேயாம்.

படுக்கும்போது இடது புறம் கீழிருக்கும்படி படுக்கவேண்டும். வலது புறத்தைக் கீழே வைத்துப் படுக்கக் கூடாது. அப்படிப் படுத்தால் அஜீர் ணாதி ரோகமுண்டாமென்று வைத்தியநூல் கூறுகின்றது. இடது புறத்தி லேயே இதயம், பித்தாசயம், பாசாசயம், ஆமாசயம் இவைகளிருக்கின்றன. இடது புறங் கீழ்வைத்துப் படுத்தால் அடியில் ஆமாசயமும் மேலே பித்தா சயமு மிருக்கும். பித்தாசயமே ஜாடராக்கினியாதலால் அது உண்ட உண வைச் சீக்கிரம் பாகம் செய்யும். வலது புறம் படுத்தால் மேலே ஆமாசய மும், கீழே பித்தாசயமும் நிற்கும். அதனால் ஆமாம் சீக்கிரம் பாகப்படும். பாசாசயத்தில் ஜாடராக்கினி அவ்வளவுதாக்காது. ஆதலால் ஜீரணமாகாது.

வலதுபுறத்தைக் கீழ்வைத்துப் படுப்பது குற்றமாகா என்று ஆங்கிலவைத்தியர் கூறுகிறார்களே யெனில் அவர்கள் வசிக்கும் தேசம் சமபூமிமத்திய ரேகைக்கு வெகு தூரத்திலுள்ளது. அங்கே பனி மிகுதி. அத்தேச வியல்பற்றி அவர்கள் கூறினார்கள். நமது தேசவியலுக்கு அது பொருந்தாது. ஆதலால் நாம் இடது புறத்தைக் கீழ்வைத்தே படுக்க வேண்டும்.

படுக்கும்போது தண்ணீர்ப் பாத்திரமும் சமீபத்திலிருக்க வேண்டும். ஒரு மூங்கிற்றடி பக்கத்திலிருக்கவேண்டும். சரியான தலையணை யிட்டு அதன்மேல் தலையை வைத்துக்கொண்டு படுக்க வேண்டும். அத்தலையணை கழுத்துக்கும் தோளுக்கும் மத்தியிலிருக்கும் அளவான உயரமுள்ளதாயிருக்க வேண்டும்.

"கழுத்திற்குந் தோளிற்குங் கண்ட வுயர்வாய்
வழுத்துநீ ளத்தில்வைத்து மட்டா—யிழைத்தநறும்
பஞ்சின் றலைக்கணைக்கெப் பானரம்பு நன்குறும்போந்
துஞ்சின் றலைக்கு மூச்சிச்சூர்."

கழுத்துக்குந் தோளுக்கும் மத்தியிலுள்ள வுயர முள்ளதாயும், வேண்டியமட்டும் நீளமுள்ளதாயும், இலவம் பஞ்சிட்டுத் தைக்கப்பட்டதாயுமுள்ள தலையணையில் தலையை வைத்துத் தூங்கினால் பாதம் முதல் சிரசுவரைக்குமுள்ள எல்லா நரம்புகளும் சமனாகவும், பிசகாமலு மிருக்கும். சிரசைப் பற்றிய நோய்களும் நீங்கும். சூர் = நோய்.

என்று தேரையர் கூறியதனாற் காண்க. இப்படிப் படுத்துக்கொண்டு நித்திரை செய்வதனாற் பகற்காலத்தில் தொழில் செய்திளைத்த கருவிகளும் புலன்களும் களை யொழிந்து சுகப்படும். புலன்களால் அலைக்கப்பட்ட மனமும் களைதீர்ந்து சுகமுறும். சரீரக்களைப்புந் தீரும். ஆயுளும் விருத்தியாகும். களையாறிய கருவிகரணங்கள் மறுநாள் எழுந்தபின் தாங்கள் செய்யவேண்டிய தொழில்களைக் கிரமமாய்ச் செய்யும். சரீரத்தி னுட்புறத்திலுள்ள மலங்களும் ஆவியாக வெளியிற் செல்லச் சரீரம் நிர்மலமாய்ச் சுத்தமுள்ள தாகும். நித்திரை செய்யாவிடிற் பலவகை வியாதிகளும் சேரும்.

"ஐந்திந் திரிய வசவுக் கியமகலும்
நைந்தமனத் துச்சாக நண்ணுங்காண்—பைந்தொடியே
மேனீட்டு மாயுளுறு மெய்யி னயர்வொழியுங்
கானீட்டிப் பள்ளிகொள்ளுங் கால்
சித்த மயக்கஞ் செறியைம் புலத்தயக்க
மெய்த்த லுறக்கமந்த மென்பவைக—ணித்தமுற
வண்டுஞ் சிலரைநா யாய்ப்பன்னோய் கவ்வுமிராக்
கண்டுஞ் சிலரைநம்பிக் காண்."

என்பதனால் 'நித்திரை செய்வதில் பஞ்சேந்திரியங்களும் சுகமுறும்; மனம் உற்சாகமடையும்; சரீரக்களைதீரும்; ஆயுசு விருத்தியாகும்,' எனவும், 'இரவில் நித்திரை செய்யாவிட்டால் சித்தமயக்கம், பஞ்சேந்திரியச்சோர்வு, மந்தம், இவைகளுண்டாகும்; வேட்டை நாய்களைப்போல வியாதிகள் பலவும் சிலரைப் பீடிக்கும்' என்றும் விளங்குவது காண்க. நித்திரை செய்யும் போது வேறு கவலையின்றித் தமது இஷ்டதெய்வத் தியானத்துடனே தூங்கவேண்டும். படுக்குமிடத்தில் கண்ணாடி படம் முதலியவைகளை வைத்

திருக்கவேண்டும். காலையில் விழித்தவுடனே அவைகளைப் பார்ப்பதற்காக அவசியம் வேண்டும். தெய்வத்தியானத்துடனே நித்திரைசெய்து தெய்வத்தியானத்துடனேயே கண்விழித் தெழ வேண்டும்.

இவ்விரவில்தான் விவாகமாயிருக்கும் கிருகஸ்தர்களுக்குத் தர்மபத்தினி சங்கமமும் விதிக்கப்பட்டது. இது தர்மசந்தான விருத்தியைக் குறித்ததேயாம். ஸ்நானம் செய்யாம லிருக்கிறவள், ரோகமுள்ளவள், மாதவிடாயுள்ளவள், கர்ப்பிணி, விருப்பமில்லாதவள், கோபமுள்ளவள், வியபசாரி, சக்தியற்றவள், வேறான சிந்தையுள்ளவள், தனக்கு மூத்தவள், பசியுள்ளவள், அதிகமாய்ப் புசித்தவள், பிறனுக்குரியவள் ஆகிய இவர்கள் கலவிக் கேலாதவர்கள் என்றுகூறப்பட்டது. மேற் குறித்தவைகளுக்கு மாறான இலக்கணங்களுள்ள தமது சொந்த பத்னியே தர்ம சந்தானக் கலவிக் குரியவளாம். ஸ்நானம் செய்து சந்தன புஷ்ப பரிமளமாலை புனைந்து, மனதுக்குச் சந்தோஷந்தரும்படி வாசனை வஸ்துகளுடன் கலந்த தாம்பூல மருந்தி, மன ஒற்றுமையுடன் இருவரும் கலத்தல் முறையாம். ஒருவர் மூச்சுக் காற்று ஒருவர்மேற் பட்டால் அது விஷயமாய்த் தீமை செய்யும். அக் குற்றங்கள் நீங்கவே சந்தனாதிகள் விதிக்கப் பட்டன. பெண்கள் சுவாசமதிகவிஷ முடையது. அது புருஷனுடைய ஆயுளை யபகரிக்கு மாதலாற் கலவிக்குப்பின் தனிப்படுக்கையிற் படுக்க வேண்டுமென்பது ஒரு பட்சம். இவ் விஷத் தன்மையை ஒழிப்பதற்கே பெண்களுக்கு மூக்கில் நத்து புலாக்கு, மூக்குத்தி முதலியவும், காதுகளில் கம்மல், வாளி, ஜிமிக்கி, தாலுகா, கர்னப்பூ, முருகு முதலியவும், கழுத்தில் அட்டிகை, முத்து மாலை, பவள மாலை, பவுன்மாலைகளும், கைகளில் தங்கக் காப்பு, கொலுசு முதலியவைகளும், காலிற்பாடகம், தண்டை, கொலுசு முதலிய ஆபரணங்களும் விதிக்கப்பட்டன. உயர்ந்த கெம்பு, பச்சை, நீலம், வைரம் ரத்தினங்களா லாபரணந் தரித்தால் அவை பெண்களின் சரீரத்தி லியற்கையாக வமைந்த மல சக்தியைக் குறைக்கும். மூக்கிலணிந்தால் சுவாசத்தாலாகும் விஷத்தை விலக்கும் என்று நூல்கள் கூறுகின்றன. பெரியோர்கள் அனுபவத்தாற் கண்டறிந்து கூறுகின்றனர். இதனை யறியாதவர் அழகுக்காகவே யாபரணங்க ளணிவதென்றும், அதனால் பணம் விரயமதிக மாவதனால் அதைத் தடுக்க வேண்டுமென்றும் கூறுவர். பதார்த்த குண ஆராய்ச்சி செய்த பெரியோர் பால் மற்றைய விவரம் கேட்டுணரத் தக்கது. இச்சிறிய நூலில் விரிக்க வியலாமையால் பெண்களுக்கு ஆபரண மிடுவது நியாயமேயாமென்று கொள்க. பத்தினி சங்கம விஷயத்தில் அபிப்பிராய பேதமுண்டு. மறுமுறை சிறிது விரிப்பாம்.

(தொடரும்.)

சிவானந்த சாகர யோகீஸ்வரர்.

ஓர் ஐய வினா.

சகோதர சகோதரிகளே,

ஓர் சிவாலயத்திற்குள் ஓர் விஷ்ணு ஆலயமுமிருந்து அச்சிவாலயத்தில் துவஜாரோஹணம் ஏற்பட்டிருந்தால் நடுவில் விஷ்ணுவுக்கு எழுந்திருத்தல் செய்யலாமா? அப்படிச் செய்தல் சாத்திரசம்மதமன்றென்றும், சிவனுக்கு அதனால் தோஷம் ஏற்படுமென்றும், தோஷபரிகாரம் செய்ய வேண்டுமென்றும் சாஸ்திரம் கூறுகின்றதா? இதைப் பத்திராதிபர் அவர்க

ளாவது சாஸ்திர விற்பன்ன நேயர்களாவது ஆராய்ந்து நமதானந்தன் மூல மாக எனது சந்தேகத்தை நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு.—தென்னிந்தியாவில் கோவிந்தர் ஸ்தலமென்று 5 இருக்கின் றன (அதாவது சிவாலயத்திற்குள்ளடங்கிய விஷ்ணு ஆலயம்) ஸ்ரீ சிதம் பரம், திருநெல்வேலி, திருச்செந்தூர், ஆத்தூர், உத்திரகோசமங்கை என் பன பஞ்சகோவிந்தர் ஸ்தலங்களாம். இவ்வாத்தூரிலிருக்கிற ஸ்ரீசோமசுந்த ரேஸ்வரர் ஆலயத்தில் ஐப்பசி உற்சவம் 10-10-19ல் துவக்கமாயிற்று. புரட் டாசிமாதம் விஷ்ணுகோவில்களில் சனிவாரந்தோறும் பகவானைக் கெருட வாகனத்தில் எழுந்தருளப்பண்ணுகிறது வழக்கம் என்பது சகலரு மறிந்த விஷயம். அப்படியிருக்க 11-10-19 கடைசி சனிவாரத்தன்று கெருட சேர்வை செய்த ஸ்ரீமாந் ப. சுப்பாநாயுடு அவர்கள் பாரியை ஸ்ரீமதி நல்லம் மாளுக்கு அன்றே நோயுண்டானதன் காரணம் நாம் மேலே காட்டிய தோஷமென்று சில வீரசைவர்களும் கோவில் பட்டரும் சொல்கிறார்கள். அம்மாளும் அக்குற்றமென்றே சொப்பனத்தில் வந்து சொன்னாளென்றும் இவ்வூரில் உள்ள ஓர் பெரிய சைவவள்ளல் சொல்கிறார்.

G. S. A. வெங்கட்டராமன்,
ஸ்ரீ மதுரகவி ஆழ்வார் சபை, ஆத்தூர்.

குறிப்பு.—ஆகம ஆராய்ச்சியிற் றேர்ச்சியுடைய ஆன்றோர் யாரேனும் நூலாதாரத்தோடு இதற்கு விடையளிக்கப் பிரார்த்திக்கிறோம். தம் மன திற்குத் தோன்றும் நியாயத்தை யொருவர் தெரிவிப்பது வியர்த்தமாகும்.

பத்திரிகாசிரியர்.

கைவல்ய நவநீத வசனம்

(137-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுகாறும் கூறப்பட்ட சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்ற மூன்ற வத்தைகளையும் சாதாரணமாய்ப் பிரதி தினமும் அனுபவிக்கிறோம். இவை யன்றி துரியம், துரியாதீதம் என்ற வேறு இரண்டவஸ்தைகளையும் சேர்த்து அவஸ்தைகள் ஐந்தெனக் கூறப்பட்டிருக்கிறது. இவற்றில்,

4. **துரியம்:**—இந்த அவஸ்தையில் ஆன்மா, சித்தம் பிராணன் இந்த இரண்டு கருவிகளோடும் நாபித்தானத்தில் தங்கியிருக்கும்.

இந்த அவத்தைக ளெல்லாம் அஞ்ஞான நிலையில் அனுபவிக்கும் அவத்தைகளே. ஞானநிலையில் அனுபவிக்கப்படும் அவத்தைகளைப் பற்றிப் பின்னால் கூறுவாம். முதல் மூன்று அவஸ்தைகள் போல் துரியம் துரியாதீதம் என்ற இரண்டு அவத்தைகளும் தினம் அனுபவிக்கப் படுபவையல்ல, அடிக்கடி யனுபவிக்கப் படுபவைகளுமல்ல. எப்போதேனும் ஒரு சமயம் ஒருவர் அபாயகரமான காயம்படுதல், வியாதியடைதல் முதலிய சில காரணங்களால் மூர்ச்சை யடைகிறார்கள். அப்போது அவர்களுக்கு ஸ்மரணையில்லை. நித்திரையி லுள்ளவனைக் கூப்பிட்டாலும் தட்டினாலும் உடனே விழித்துக் கொள்கிறான். மூர்ச்சையி லுள்ளோனுக்கு அவ்வுணர்ச்சியில்லை யாதலால் அவனைக் கஷ்டத்தின்மேல் தான் விழிப்புக்குக் கொண்டுவரலாகும். இந்த நிலைமையே ஆன்மா துரியாவத்தையி லிருக்கும் நிலைமையாம்.

5. துரியாதீதம்:—இந்த அவத்தையில் ஆன்மா தனியாய் மூலாதாரத்தில் பொருந்தியிருக்கும் (மூலாதாரம்—குதத்திற்கும் குய்யத்திற்கும் மத்தியிலுள்ள இடம்.) துரியாதீதம் என்றால் துரியத்திற்கும் அப்பாலுள்ள, அல்லது எட்டாத தூரத்திலுள்ள நிலையென்பதே பொருள். அந்த நிலைக்குச் சென்ற ஆன்மா மறுபடி திரும்பி சாக்கிரத்திற்கு வருவது அசாத்தியம். இனி கோசங்களைப்பற்றிக் கூறுவாம்.

பஞ்சகோசங்கள்.

கோசம் என்பதற்கு உறை அல்லது போர்வை என்று பொருள். இக்கோசங்கள் ஆன்மா தன் நிஜசொரூபத்தை யறியா வண்ணம் அதைமூடிக்கொண் டிருக்கின்றன. கோசங்கள் அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என 5 ஆகும். இவற்றுள்,

1-வது. அன்னமயகோசம்—சுக்கில சுரோணிதங்களாலாகிய சத்ததாதுக்களால் ஆக்கப்பட்டு அன்னத்தால் விருத்தியடைந்து கடைசியில் பூமியி லழிவதாகிய இத்தூல சரீரமே அன்னமயகோசம்.

2-வது. பிராணமயகோசம்—பிராணனும் கன்மேந்திரியங்களும் கூடியது, அல்லது கன்மேந்திரியங்களோடு கூடின பிராணனே பிராணமயகோசம்.

3-வது. மனோமயகோசம்—ஞானேந் திரியங்களோடு கூடின மனம் மனோமயகோசம்.

4-வது—விஞ்ஞானமயகோசம்—ஞானேந்திரியங்களோடு கூடின புத்தியே விஞ்ஞானமயகோசம்.

5-வது—ஆனந்தமயகோசம்—காரணதேகமே (அஞ்ஞானம்) ஆனந்தமயகோசம்.

இவற்றில், அன்னமயகோசம் தூலதேகத்திலும், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம் இம்மூன்றும் சூக்குமதேகத்திலும், ஆனந்தமயகோசம் காரணதேகத்திலும் அடங்கி யிருக்கின்றன. ஆன்மா இந்த ஐந்து கோசங்களையும் விட்டு வெளிப்பட்டால், அதாவது இவ்வைந்து கோசங்களில் ஒன்றிலேனும் சம்பந்தப்படாத நிலையை யடைந்தால் தன் நிஜசொரூபத்தை யறியும். இவ்விஷயத்தைப் பற்றி நூலில் பின்னால் கூறப்படுவதால் ஈண்டு இவ்வளவோடு நிறுத்தி விடுகிறோம்.

[இதுகாறும் கூறப்பட்ட தத்துவங்களின் உற்பத்தி, நிலைமை, அவஸ்தைகள் முதலிய விஷயங்கள் யாவும் ஞானத்தையடைய விரும்புவோர் நன்றாயுணர்ந்து ஆராய்ச்சி செய்யவேண்டியவைகளாகும். எனெனில்,

ஞானத்தை யடைதல் என்பது ஆன்மா தன் நிஜவடிவைக் காண்டல் என்பதேயாகும். ஆன்மா ஒரு ரூபமுடையதல்ல. அது இம்மாதிரி யிருக்கும், இன்ன நிறமாயிருக்கும், இன்ன வடிவம், இன்ன அளவு என்று விவரிக்கத்தக்கதல்ல. இதுதான் ஆன்மாவென்று அதை யொருவரும் சுட்டிக் காட்டமுடியாது. நூல்களும் அதை யறியும் மார்க்கங்களைப் போதிக்கின்றனவேயன்றி ஆன்மா இம்மாதிரி இருக்கிறதென்று எந்த நூலும் கூறுவதில்லை. குருவும் அவ்வாறே. இந்த விஷயத்தில் ஆன்மா பரமான்மாவை

யொத்ததே. கடவுள் இவ்விதமாய் இருக்கிறார் என்று கூற யாரால் முடியும்? வேதமே அவரைக் கூறுமற்கூறுகிறது. அதாவது ஜாடையாய் அதற்கு வழி காட்டுகிறதேயன்றி வேறில்லை. பரமான்மா எவ்வித சொரூபமுடையதோ அவ்வித சொரூபமே ஆன்மாவும் உடைத்தா யிருக்கிறது. இரண்டிற்கு முள்ள வித்தியாசம் சிறிது பெரிது என்பது போன்ற வித்தியாசமே யன்றி சொரூபத்தில் இரண்டு மொன்றே. பரமான்மா ஒரு பெரிய தீவட்டி, அல்லது ஒரு பெருந்தீயென்றால் ஆன்மா ஒரு சிறு தீபம் போன்றது. இரண்டும் அக்கினியே. பரமான்மா கடல் நீ ரென்றால் ஆன்மா அதிலுள்ள ஒரு துளி நீர் போன்றது. இரண்டும் கடல்நீரே.

இத்தகைய ஆன்மாவை யெப்படி நேராய் இதுதான் என்று சுட்டியறிவது? அது கூடாத காரியம். ஆனால் இந்த ஆன்மா வேறுசில பொருள்களோடு கலந்துகொண்டிருப்பதால் அப்பொருள்களின் மூலமாய் இதையறியும் மார்க்கம் கூறப்பட்டிருக்கிறது. எவ்வாறெனின்,

ஒரு அறைக்குள் பல வஸ்துக்க ளிருக்கின்றன. அவற்றில் ஒருவஸ்து உனக்கு வேண்டியதா யிருக்கிறது. அதை யெடுத்து வரும்படி நீ ஒரு ஆளை யனுப்புகிறாய்; அந்த வஸ்துவின் பெயர்மட்டும் 'கேடையம்' என்று உனக்குக் கேள்வியுண்டு. ஆனால் அது இம்மாதிரியா யிருக்கிறதென்று ஒரு அடையாளமாவதுகூற உனக்குத்தெரியாது. நீயனுப்பும் ஆளும் அவ்வாறே. ஆனால் அந்த அறையில், கேடையத்தோடு கூட வேறு சில சாமான்களுமிருக்கின்றன. அவற்றின் பெயர், அங்க அடையாளம் யாவும் உனக்குத் தெரியும். அப்படிப்பட்ட சமயத்தில் என்னசெய்தால் உனக்கு வேண்டிய வஸ்துவை அந்த ஆள் கொண்டுவரும்படி செய்யலாம்? கேடையம் தவிர மற்ற வஸ்துக்கள் ஒவ்வொன்றின் பெயரையும் அடையாளங்களையும் அவனிடம் கூறி "இவற்றை யெல்லாம் ஒவ்வொன்றாய் நான் கூறிய அடையாளங்களின்படி கண்டறிந்து எடுத்து ஒருபக்கத்தில் வைத்துவிடு; கடைசியில் ஒரு வஸ்துவே மிச்சமா யிருக்கும் அதுவே கேடையம்; அதை யெடுத்துவா" என்றால்தான் அவன் எடுத்து வருவான்.

இதைப்போலவே ஆன்மாவும் தேகமாகிய அறையில் மேல்கண்ட தத்துவங்களோடு கூடிக்கொண்டிருக்கிறது. அத்தத்துவங்களின் பெயர் இலட்சணங்கள், குணங்கள் யாவும் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாய்க்கூறி "இது ஆன்மாவல்ல, இது ஆன்மாவல்ல, இவை யாவும் கழிக்கப்பட்டபின் மிச்சமாய் எது இருக்கிறதோ, எதை நீக்க உன்னால் முடியவில்லையோ அதுதான் ஆன்மா. அதுதான் நீ" என்று வேதம் கூறுகிறது. ஆதலால் தத்துவங்களின் சொரூபங்களை ஆராய்ச்சி செய்து நன்குணர்ந்தால்தான் அவற்றை ஒவ்வொன்றாய்க் கண்டு கழித்து முடிவில் ஆன்மாவின் நிஜசொரூபத்தைக் காணலாகும். அவஸ்தைகள், கோசங்கள் முதலியவை ஆன்மா தத்துவங்களில் சிலசிலவற்றோடுகூடித் தொழில் செய்யும் நிலைமைகளைக் குறிக்கின்றன. இவற்றின் ஆராய்ச்சியும் தத்துவங்களை வேறுபிரித்து விட்டு ஆன்மாவை யறியச் சக்தியளிப்பதாகும்.

ஏககாலத்தில் மனதின் இரஜோ தமோ குணங்களை யழித்துவிட்டு சத்துவகுணத்தைக்கொண்டு (அதாவது மனோலயம் செய்து) ஆன்மசொரூபத்தை யறிவது யாவராலும் ஆகக்கூடிய காரியமல்ல. மனமே உலகமாகையால் உலகஇச்சை யுள்ளமட்டும் மனம் ஒடுங்காது. உலகப்பற்று ஒழிவதெனின், அது இலேசில் ஆகிறகாரியமல்ல. அகப்பற்று புறப்பற்று இரண்

டும் ஒழியவேண்டும். புறப்பற்றை விட்டால்தான் அகப்பற்று சுலபமாய் ஒழிந்துபோம் என்பதைக் கருதியே, சன்னியாசம் பெற்றால்தான் எளிதில் ஞானத்தை யடையலாம் என்று பல நூல்கள் கூறுகின்றன. ஆனால் ஞானத்திற்கு அவசியம் வேண்டுவது அகத்துறவே. அது ஒழிந்துபோனவன் இல்லறத்திலிருப்பினும் தாமரை யிலைமேலுள்ள நீர்த்துளிபோலும், புளியம்பழமும் ஓடும் போலும் மனதிற் பற்றின்றி யிருப்பான். அகப்பற்றொழிந்து புறப்பற்றோடு (இல்லறத்தில்) இருப்பவன் நிலைமை, வேரோடு பிடுங்கி வேரைக்கழித்த பின் மண்ணில் சொருகி வைக்கப்பட்ட ஒருசெடி போன்றது. அச்செடி பார்ப்போர்க்கு உயிருள்ள செடிபோலவே பசுமையாய் அச்சமயம் தோன்றினும், இரண்டொரு தினங்களில் வாடியுலர்ந்து பட்டுப்போன மரமென்று தெரிந்துவிடும் நிலையை யடையும். அதுபோல் அகப்பற்றொழிந்தால் புறப்பற்று சுலபமாய்த் தானே யொழிந்துபோம்.

அகப்பற்று நீங்காமல் புறப்பற்றை மட்டும் விட்டொழிந்தவன் (சந்நியாசி) நிலைமை யெவ்வாறெனின், சுற்றிலு முள்ள கொடிசெடி முள் யாவற்றையும் களைந்தெறிந்தபின் கிளைகளும் கழிக்கப்பட்ட மரம்போன்றது. அம்மரத்தின் வேரைச் சீக்கிரம் அழிக்காவிட்டால் கொஞ்ச நாட்களில் அம்மரம் துளிர்த்து இலை முதலியன உண்டாகிப் பழையநிலைமைக்கு வந்துவிடும். ஒரு மரத்தைச் சூழ்ந்திருக்கும் செடி கொடி முதலியவற்றைக் களைந்துகிளைகளையும் கழித்துவிட்டால் பிறகு மரத்தின் வேரைச் சுலபமாய்க் களைந்துவிடலாம். அதுபோல் புறத்துற வடைந்தாலே அகத்துறவடைய அனுகூலமாயிருக்கு மென்பது ஒரு கொள்கை.

இதுவரையில் நாம் கூறியவற்றால் அகத்துற வடைவதே சிரேஷ்டம் என்று தோன்றும் - வாசா ஞானமாய்க் கூறுவோர் "எல்லாம் மனதால் இருக்கிறது. மனதைச் சரியாய் வைத்துக் கொண்டால் எங்கிருந்தாலென்ன? நமது மனம் சரியாயிருந்தால் நாம் வேசிவீட்டில் குடியிருந்தால் தானென்ன? சன்னியாசி யென்று வேடம்தரித்துக் கொண்டால்தான் ஞானம்வருமோ-அதெல்லாம் கபடவேடம். சன்னியாசி யென்று காஷாயம் தரித்து வெளிவருகிறவர்களெல்லாம் சுத்த கள்ளப்பயல்கள்" என்று மிகச் சுலபமாய்க் கூறி மந்தபுத்தி யுடையோர் பலரைக்கெடுத்து விடுகிறார்கள். இப்படிக் கூறுகிறவர்கள் இரண்டிலும் பயனடையாது அழிகிறவர்களே. இல்லறத்தில் எந்நேரமும் மனத்தைநிலையற்ற உலகவிஷயங்களில் இழுக்கத்தக்க புறப்பற்றுகளைச் சுற்றிலும் வைத்துக்கொண்டு ஞானத்தை யடைவதெனில் அது சொல்லொணாக் கஷ்டத்தின்மேல்தான் சாத்தியமாகத் தக்கவிஷயம். அப்படி பூர்வபுண்ணியத்தால் ஞானத்தை யடைந்தாலும் அவன் குடும்பத்தி லுள்ளமட்டும் மிக்கத் துக்கத்தை யனுபவிக்கவே வேண்டும். அதற்கு முயற்சிசெய்யாத நமக்கு அதிலுள்ள கஷ்டம் சற்றும் தெரியாததால் எல்லாவழியும் தெரிந்தவர்கள் போல் வாயால் அப்படிக் கூறிவிடுகிறோம். அடிக்கடி மனதை உலக விஷயங்களில் இழுக்கத்தக்க புறப்பற்றை யொழித்து ஞான அப்பியாசம் செய்வோர்கள் அப்போதைக் கப்போது மனதிலெழும் அந்நினைப்பைச் சுலபமாய் ஒழித்துவிட முடியும். ஏனெனில் அவர்கள் சாத்திர ஆராய்ச்சியாலும் கேள்வியாலும் உலக போகங்களிலுள்ள துக்கங்களையும், அவற்றால் நேரிடும் கெடுதிகளையும் உணர்ந்து, அடிக்கடி சிந்தித்து அவற்றில் வெறுப்படையும் மார்க்கத்தில் பழகுகிறார்களே யன்றி, அவர்கள் மனதைக் கவர்ந்து உலக விஷயங்களில் இழுக்

கக்கூடிய புறப்பற்றென்றும் அவர்களிடமில்லை. ஆனால் ஞான இச்சையுடைய ஒவ்வொருவரும் முதலிலேயே இல்லறத்தை விட்டு வெளிப்பட்டு விடுவதெனின் அதுவும் சுலபமாய் நடக்கிற காரியமல்ல.

ஆகையால் ஞானத்தையடைய விரும்புவோன் முன்னே 'இதை விடவேண்டும், அதை விடவேண்டும்' என்று சிந்தித்துக் கொண்டு, எதையும் விடமுடியாமல் விழித்துக்கொண்டு வீண்காலம் போக்குவதில் ஒரு பயனுமில்லை. புறப்பற்றை வெறுத்து விட்டுவிட முடியாவிட்டால் முதலில் எதைவிடவும் சிந்திக்க வேண்டாம். 'எல்லாம் இருந்தாலும் ஒருபக்கம் இருக்கட்டும், நாம் நம்மையறிய முயலவேண்டும்', என்ற வைராக்கியத்தைக் கைக்கொண்டு அதற்கு விடாமுயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டும். சாத்திர ஆராய்ச்சியும் அப்பியாசமும் ஏற ஏறப் பற்றுக்கள் தாமே விட்டொழியும். இதற்கு ஈசுரபக்தி முக்கியமும் முதன்மையுமானதென்பதை மறக்கலாகாது. அத்துடன் அப்பியாசம் செய்து ஆத்மஞானம் பெற தத்துவ ஆராய்ச்சி பேருதவி யாதலின், மேல் கூறப்பட்ட தத்துவ விஷயங்களைக் கதைபோல் வாசிப்பதோடு விட்டுவிடாமல், அவற்றை யாராய்ச்சி செய்து அனுபவமா யுணர முயன்றாலே ஆன்மாவை யறியலாகும். இவ்வசனம் நூலாய் வெளிவரும்போது மேல் கூறப்பட்ட தத்துவ விஷயங்கள் சுலபமாய் மனதிற்படியும் வண்ணம் வேண்டிய சக்கரப்படங்கள் சேர்க்கப்படும்.] (தொடரும்) சீடன்.

கவனிக்கவேண்டிய ஓர் விஷயம்

கடந்த வாரம் கீழ்க்கண்ட விஷயமடங்கிய ஓர் கடிதம் நமக்குக் கிடைக்கப்பெற்றோம்.

கடிதம்.

"ம-ா-ா-ஸ்ரீ பத்திரிகாசிரியரவர்கட் கெழுதியது. இம்மாதச் சஞ்சிகையைப் படித்து மகிழ்ந்து கொண்டு வரும்போது நித்தியவிதி முன்னிரவு என்னும் விஷயத்தில் நூற்றைக்கெடுத்தது குறுணியென்பது போன்றுள்ள புதியமாம்சம் பழையமாம்சம் அழுகிய மாம்சம் என்னும் பதங்களைக் கண்ணுறவே, அகங்கறுத்து முகஞ்சிறுத்து நம்மானந்தனிடத்து வைத்திருந்த அன்பின் முகநாற் பாகத்தை என் கண்ணுற்காணப்பட்ட பல சந்தா நேயர்கள் இழந்து விட நேரிட்டதை நான் நேரிலறிந்தேன். இப்படித் தானே எல்லா நேயர்களுக்கும் ஷை வசனங்கள் நம்மானந்தனிடத்து அருவருப்புண்டாகச் செய்திருக்கு மென்று மனம் வருந்துகின்றேன். வைத்திய சாத்திரங்களில் அதைப்பற்றிக் கூறியிருப்பினும் காலத்தை நோக்கி அதைக் கழித்து விடுவதே உத்தமமல்லவா? ஆதலால் இனிமேலாவது அத்தகைய அசப்பிய வசனங்களை யெழுதாதிருப்பதே நலம். அடுத்த சஞ்சிகையில், தாங்கள் சீவகாருண்யம் என்னும் விஷயத்தை யெடுத்துக்கொண்டு மருந்திற்குக்கூட ஊனருந்தலாகா தென்று கொலை மறுத்தல் முதலிய நூற்பிரமாணங்கொண்டெழுது வீர்களானால், இழந்துபோன அன்பை நம் நேயர்கள் மீண்டும் பெற்றுக் களிப்படைவார்களென் றெண்ணுகின்றேன்.

இவ்விஷயம் எனக்கும் ஆனந்தனுக்குமுள்ள சிநேக பாவத்தாலெழுதினேனே யன்றி ஒருவர்மீது துவேஷங் கொண்டன்று. வந்தனம்.

இங்ஙனம், ஓம் தத்ஸத்.

சந்தா மெம்பர்களுள் ஒருவன்."

மேற் கண்ட கடிதத்தில் அதை யெழுதியவர் கையொப்பம் வைக்காத தினாலும், நமக்கேனும்தாம் இன்னாரென்று வெளியிடாதபடியாலும், அதை யெழுதியது தகுதிதானா யென்ற நம்பிக்கை அவருக்கேயில்லை யென்று தெரிகிறது. இத்தகைய அநாமதேயக் கடிதங்கள் கவனிக்கப் படுவதே யில்லை. ஆயினும் ஒரு சமயம் இன்னும் சிற்சிலருக்கு இத்தகைய விபரீத யோசனை உதிக்கலாகு மென்று கருதியே இதை வெளியிடலாயிற்று.

சிவானந்தசாகர யோகீஸ்வரர் அவர்கள் தாம் எழுதிவரும் 'நித்திய விதி—முன்னிரவு' என்ற விஷயத்தில் ஆகாரவிதியைப் பற்றி கூறும் பாக த்தில் பழைய மாமிசம் புதுமாமிசம் என்று எழுதியதைக் கண்டதாலேயே தமக்கும் தம்போன்ற இன்னும் சில சந்தாதாரர்களுக்கும் அகங்கறுத்து, முகஞ்சிறுத்து ஆனந்தனிடத்து வைத்திருந்த தங்கள் அன்பில் முக்கால் பங்கு போய்விட்டதாக நமது அநாமதேயர் எழுதுகிறார். அந்தோ! கடிதத் தில் அச்சிடப்பட்ட எழுத்துக்களைக்கண்டே இவ்வளவு துன்புற்ற இவர், பிரதிதினம் ஊரில் எத்தனையோ ஜீவன்கள் பகிரங்கமாய் பிராணவதை செய்யப்பட்டு தம்மைச் சுற்றியுள்ளோரால் அவற்றின் மாமிசம் புசிக்கப்படு வதைக் கண்ணாரப் பார்த்துக்கொண்டு எவ்விதமாய் நிம்மதியோ டிருக்கி றாரோ நாம் அறியோம்.

சீவகாருண்யத்தைப் பற்றியும் புலாலுண்ணலைப் பற்றியும் முன்னமே நமது சஞ்சிகையில் வியாசங்கள் வெளிவந்திருக்கின்றன. பலவிஷயங் களில் குறிப்பிடப்பட்டு மிருக்கின்றன. சிலர் ஜீவகாருண்யம் என்றதலைப் பெயரிட்டு மாமிசபோஜனம் செய்யலாகாது என்ற ஒன்றைப் பற்றி மட்டும் எழுதி யனுப்புகிறார்கள்.

உலகில் நமது புண்ணியநாடு தவிர வேறெந்த நாட்டிலும் சீவன்களைக் கொன்று அவற்றின் மாமிசத்தைப் புசித்தல் பாபம் என்ற பிரஸ்தாபமே யில்லை யெனக்கூறலாம். நமது வேதத்தில்தான் அந்த உயர்ந்த நீதி கூறப் பட்டிருக்கிறது. அதாவது ஜீவகாருண்யமே ஈசுவர கிருபைபெற முதற் படியென்று எல்லா நூற்களும் ஆதிமுதல் கோஷிக்கின்றன. ஜீவகாருண் யம் என்பது சகல ஜீவன்களையும் தன் ஜீவனாய்க்கருதி யாவற்றினிடத்தும் கருணை பாராட்டுதலாம். மாமிசம் புசிக்காமலிருப்பது மட்டுமல்ல ஜீவகா ருண்யம். அப்படியிருந்தும் நம் நாட்டில் எண்ணிறந்தோர் ஜீவன்களை வதைத்து அவற்றின் மாமிசத்தை யுண்பது பரம்பரை வழக்கமாய் இருந்து வருகிறது.

மனிதரிடம் பல தீய குணங்களிருக்கின்றன. அவற்றில் ஒரு குண த்தை (பொறுமை அல்லது பேராசை அல்லது பரஸ்திரீயை யிச்சித்தல் ஏதோ ஒன்றை) விட்டு விடு என்று எவ்வளவோ போதித்தாலும் ஒருவன் விடுவது கஷ்டமாயிருக்கிறது. அதை விடவேண்டியதற்கு மனதை மட் டும் நல்வழியிற் திருப்பினால் போதும். அப்படிப் பட்டதை விடுவதே கஷ் டமாயிருக்கிறது. மாமிச போசனமோ ஒருவன் மனதிற்கும் தேகத்திற் கும் குழவிப்பருவமுதல் பழகிப்போய் இயற்கைக்கு இரண்டாவ தாய்விட்டி ருக்கிறது. வைத்தியரைக் கேட்டால் "அடியோடு விட்டுவிட்டால் வியாதி யுண்டாகும்" என்கிறார். சிலர் விட்டு விட்டுப் பிறகு வியாதியுற்று வைத்தி யரின் கட்டளையால் மறுபடி சேர்த்துக்கொண்டிருக்கிறார்களென்பது அனு பவம். புத்தியறியும் பருவம் வந்த எவனும் அது பாபம் என்று தெரிந்தி ருந்தும் அதை விடக் கூடாமலே யிருக்கிறான். அத்தகைய வழக்கத்தை

இரண்டொரு பிரசங்கங்களைக் கேட்பதாலும் வியாசங்களை வாசிப்பதாலுமே ஒருவன் விட்டுவிடுவானென்று எதிர்பார்ப்பது உலக அனுபவமறியாத் தன்மையே யன்றி வேறில்லை. ஒருவன் உண்மையான ஜீவகாருண்யம் இன்னதென்றுணர்ந்து அனுபவமாயதை யடையவேண்டும். அத்தகையோன் அதன்பின் உலக நிலையாமையையும் தேக நிலையாமையையும் உணர்ந்து நித்திய வஸ்துவைப் பெற முயன்று, தேகத்தை வெறுத்து, ஆகாரத்தில் இது வேண்டும் இது வேண்டாம் என்ற வித்தியாசத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டொழிவதால் மாமிச இச்சை யென்பதையே அடியோடு மறக்கலாகும். அப்படிக்கின்றி இன்னொருவர் போதனையால் நீக்கிவிடுகிறானென்பது சாத்தியமானதல்ல. இப்போது பரம்பரையாய் நீக்கிவிட்டிருப்போரும் மற்றையரும் பிறந்தது முதல் அப்பழக்க மில்லாததினாலேயே அதில் இச்சை செல்லாது அதை வெறுக்கிறார்களன்றி சீவகாருண்யம் என்பதைக் கருதியல்ல. அத்தகையோரில் எத்தனையோ பேர் தமக்குச் சமானமான உயர்பிறப்பைச் சேர்ந்த தம்போன்ற இதரமனிதரிடம் சற்றும் கருணையென்பதின்றி தமது சுயலாபத்தைக்கருதி பிறர்க்கு மரணவேதனையினும் கொடிய வேதனைகளை யளிப்பதே யிதற்குச் சான்றாம். இது எங்கேனும் சீவகாருண்ய மாகுமோ. மாமிசம் பொசிப்போரும் தாங்கள் பொசிக்கும் இனத்தைத்தவிர மற்ற மாமிசங்களைக் கண்ணுற் காணவும் நினைக்கவும் கூட வெறுக்கிறார்கள். அநாதிகாலம் முதல் எண்ணிறந்த நூல்கள் இதைப் பற்றிகோஷித்துக் கொண்டிருந்தும் நமதுநாட்டில் மாமிசம் பொசிப்போர் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நீதிநூல்கள் எண்ணிறந்தன விருப்பினும் உலகில் யோக்கியரைப்போல் அயோக்கியரும் இருந்து கொண்டே தானிருப்பார்கள். நன்மையும் தீமையும், சுகமும் துக்கமும், இருளும் ஒளியும் உலகில் இருந்துகொண்டே யிருக்கும். இக்காரணத்தினாலே மாமிசம் புசிப்போரும் இருந்து கொண்டேதா னிருப்பார்கள் என்பதை யறிந்த நம் முன்னோர்களாகிய சகல சாத்திர விற்பன்னர்கள், ஜீவவதை செய்து மாமிசம் புசிப்பதாலுண்டாகும் பாபத்தையும் மற்ற தீமைகளையும் வற்புறுத்திக் கூறியபோதிலும், ஒரு பக்கம் அப்படியும் அறிவு விளங்காது புசிப்போரும் அதற்கு அவசியமான விதி நீடேதங்களை யனுசரித்துத் தேக சுகத்தையேனும் காப்பாற்றிக் கொள்ளட்டு மென்றே வைத்திய நூல்கள் முதலியவற்றில் பலவித மாமிசங்களின் குணங்கள் கெடுதிகள் முதலியயாவற்றையும் கூடக் கூறியிருக்கிறார்கள்.

அவற்றை யனுசரித்தே நமது யோகீஸ்வரரும் போஜன விதியில் அதைக் கூறவேண்டியது அவசியமாயிற்று. அப்படிக் கூறப்பட்டதனாலேயே மாமிச போஜனம் செய்யலாம் என்று கூறியதாய் சாதாரண அறிவுடையோரில் ஒருவரும் கருதமாட்டார்கள் என்றே நம்புகிறோம். சாத்திர விற்பன்னரும், ஆசாரசீலரும், பிரம்மகுல சிரேஷ்டரும், ஆன்றோருமாகிய நமது யோகீஸ்வரர், அவ்விஷயம் குற்ற முளதாயின் அதைக் கூறுவாரா என்பதைச்சற்றேனும் சிந்திக்காது நமது அநாமதேயர் அதைக்குற்றங்கூறி வரைந்ததற்காக மிக்க விசனிக்கிறோம்.

"வைத்தியசாஸ்த்திரத்தில் கூறியிருந்தாலும் காலத்தைநோக்கி அதைக் கழித்து விடுவதே யுத்தமமல்லவா?" என்று நமதுநண்பர் எழுதியிருக்கிறார். இக்காலத்தில் நமது நாட்டார் ஜீவ இம்சைசெய்தல் மாமிசபோஜனம் முதலியவற்றை நீக்கி எல்லோரும் மறுமைப்பயனடைய முயற்சிசெய்யவேண்டுமென்பதில்தான் ஊக்கமா யிருக்கிறார்க ளென்று இவர் கருதுகிறாராக்கும்.

அந்தோ! நம்மவரிற் பெரும்பாலார் நமது முன்னோர் மொழிகளையும் நம் பூர்வீக ஆசார ஒழுக்கங்களையும் அலட்சியம் செய்து, நமக்குத் தகுதியல்லாத அன்னிய நாட்டாசாரங்களைப் பின்பற்றி யொழுகுவதில்தான் சிரத்தையுடையவர்களா யிருக்கிறார்க ளென்பதை நமது அநாமதேய நண்பர் உணரவில்லைபோலும்.

நமது நாட்டார் கூடியவரையில் மாமிச போஜனத்தை யொழிக்க வேண்டுமாயின், அதற்குத்தக்க மார்க்கத்தைக் கையாடவேண்டும். அதாவது பெற்றோர் அதனால் நேரிடும் பாபம் முதலியவற்றை யுணர்ந்து தமது மக்களுக்கு அவர்கள் குழந்தைப் பருவத்தி லிருந்தே அவ்வுணவை யளிக்காது அதில் விரக்தியைக் கற்பிக்கவேண்டும். அவர்களுக்கு அறிவு விளங்கும் பருவம் வருந்தனிலும் அன்னியராலும் அவர்களுக்கு இக்கொடிய பழக்கம் உண்டாகாதபடி பாதுகாப்பதோடு, தாங்கள் பொசிப்பதையும் அவர்கள் காணாவண்ணம் மறைவில் செய்து வரவேண்டும். தாய்தந்தையரே இவ்வளவு கஷ்டம் எடுத்துக் கொண்டால் அப்போதுதான் குடும்பத்தினின்றே இப்பழக்கம் அடியோடொழியும். இன்னும் விரிக்கிற் பெருகும் என்றஞ்சுகிறோம். ஓம் தத்ஸத்.

பத்திரிகாசிரியர்.

"எம்மதங்களும் சம்மதமே"

சகோதர சகோதரிகளே!

கடந்தவாரம் E. J. Rajarathnam, C. M. T. Evangelist, Kandal Ooty, என்று கையொப்பமிட்ட சந்தா நேயர் ஒருவர் பின்கண்ட கடிதத்தை நமக்கு அனுப்பி யுள்ளார் :—

கடிதம்

"ம-௱-௱-ஸ்ரீ, பத்திராதிபருக்கு, 21-10-19.

நமது ஆனந்தனின் (ஐப்பசிமீ) 137 பக்கத்தில் "பெண்கல்வியில் குற்றங்கள்" என்ற விஷயத்தின் பேரில் இலங்கை காலி நகரிலுள்ள ம-௱-௱-ஸ்ரீ தாணுலிங்கம் பிள்ளை ("ஆறுகள்பலவும் பல விடங்களில் உற்பத்தியாகி பல திக்குகளில் ஓடினும் முடிவில் கடலையே சேர்வதுபோல) எச்சமயத்தார் வணங்கும் வணக்கமும் அவர் ஒருவரிடமேபோய்ச் சேரும்" என்பதையும், "எம்மதங்களும் சம்மதமே" என்றும் இவ்வாறாகத் தாமும் ஒத்துக்கொண்டு, மற்றவாளுக்கும் எடுத்துக் காட்டிப் பிறகு அந்த விஷயத்திலேயே "நமது பிள்ளைகளை அன்னிய மதங்கள் போதிக்கப்படும் பாட சாலைக்கு அனுப்புகிறார்க" ளென்றும், "அதினால் ,பெரும் பாதகத்தைத் தங்களுக்கு உண்டாக்கிக் கொள்ளுகிறார்க" ளென்றும், "நமது மதம் பிறர்மத" மென்றும் பிரத்தியேகப் படுத்திச் சொல்லுவானேன். அவர் சொல்லியபடி நமது பிள்ளைகள் எப்பாடசாலையில் படித்தால் தான் என்ன? அவர்கள் சன்மார்க்கத்திலும், பக்தி விஷயத்திலும் வளர்வது தானே நமது கோரிக்கை. ஆகையால் தாங்கள் தயவுகூர்ந்து இச்சந்தேக நிவர்த்தியை நமது ஆனந்தன் மூலமாய் வெளிப்படுத்துவீர்களென்று எதிர்பார்க்கப்படுகிறது."

ஆறுகளனைத்தும் கடலையே சேர்வதுபோல் எல்லா மதஸ்தரின் பிரார்த்தனைகளும் ஆண்டவனையே சாருமென்பதும், எல்லா மதங்களும் ஆண்டவனுக்குச் சம்மதமே யென்பதும் மெய்யே. ஆகையால் அன்னியமதத்தைப் பொய்யென்றும், அதில் கூறப்பட்ட கடவுள் மெய்யல்ல வென்றும் இகழாமல் தம் தம் மதத்தில் நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து அதிற் கூறியுள்ள கட்டளைகளின்படி நடக்கவேண்டு மென்பதேகருத்து. கடவுள் எம்மதத்தில் நம்மை யுற்பத்திசெய்தாரோ அம்மதத்தின் இயற்கையை விட்டிடலாகாது. அப்படிக்கின்றி மேற்கண்ட கொள்கைகளுக்கு மாருக "உங்கள் மதம்பொய், அதன்படி நடந்தால் மோட்சம் கிடைக்காது," என்று கூறி தம்மதத்தைப் போதித்து அதில் சேரும்படி தூண்டும் மதத்தினரிடம் நம்மக்களை யனுப்பினுல், சுயமத ஆராய்ச்சி இன்னுமடையாத அச்சிறுவர்கள் தம்மதத்தின் உண்மை யறியா திருக்கையிலேயே அதில் நம்பிக்கையற்று, பிறமதத்தை யாராய்ந்தறியச் சக்தியில்லாததால் அதிலும் நம்பிக்கை கொள்ளாமல் முடிவில் நாஸ்திகத்திற்குச் சமமான நிலைமையை யடைந்து ஆண்டவனருளுக்குத் தகுதி யற்றவர்களாய் அழிவார்களென்பது உண்மை. ஆதலின் நம்மக்களுக்கு முதலிலேயே நமது மதக்கல்வியைப் போதிக்காமல் மேல்கண்ட விதமாய் நடக்கும் அன்னிய மதபோதனை செய்யப்படும் இடங்களுக்கு அவர்களை யனுப்புவதால் நமக்குப் பெரும் பாதக முண்டாகு மென்பது நன்குவிளங்கும்.

கடவுள் ஒருவரே யாதலால் அறிவாளிகள் உன்கடவுள் என்கடவுள் என்று ஒருபோதும் விவகரிக்க மாட்டார்கள். மதங்கள் பலவாகவும், தம் தம் கொள்கைகளில் பேதமுடையவைகளாகவும் இருக்கிறவரையில் நமது மதம், அன்னியமதம் என்று விவகரிப்பது சுபாவமே. "நமது பிள்ளைகள் எந்த பாடசாலையில் வாசித்தாலென்ன? பக்தியில் வளரவேண்டுவதுதானே" என்று நமது நண்பர் கேட்கிறுர். பாடசாலையைப்பற்றி இங்கு அவசியமில்லை. மதபோதனையைப்பற்றியே கூறப்படுவது. ஒரு வஸ்துவில் நம்பிக்கை யுண்டாகி, அதனுல் நமக்கு நன்மை யுண்டாகுமென்று கண்டாலன்றி அதனிடத்தில் எவ்வாறு அன்போ விருப்பமோ உண்டாகும்? அது போன்றே, ஒருமதத்தில் நம்பிக்கை யுண்டானுலன்றி யதனிடத்தில் அன்பும் அதிற் கூறப்பட்ட கடவுளிடம் பக்தியும் ஒருபோதும் உண்டாகா வென்பதை நமது நண்பரே சற்று சிந்தித்தால் நன்கு விளங்கும். இது மட்டுமல்ல. சுயமத ஆராய்ச்சியும் கடவுள் இலட்சணமும் சற்றுமுணராச் சிறுவர்களுக்கு "உங்கள் மதம் பொய். அதில் கூறப்பட்டவைகள் கடவுளல்ல" என்று போதித்தால், அப்போதே அவர்களுக்கு "ஓகோ பொய்த் தெய்வங்கள் மெய்த்தெய்வங்கள் என்று தெய்வங்களில் வித்தியாசமிருக்கிறது" என்ற அஞ்ஞான பேதபுத்தி யுண்டாகிவிடுவதால், அவர்கள் மனதார இது மெய்த்தெய்வம் என்று தோன்றினுலன்றி அவர்களுக்குத் தெய்வபக்தி யொருபோது முண்டாகா தென்பதை நம் நண்பர் உணர்வாராக. ஒரேயொரு திருட்டாந்தமட்டும் கூறி இதை முடித்துவிடுகிறேம்

ஹிந்துமதத்தில் விக்கிரக ஆராதனை விதிக்கப்பட்டிருக்கிறது (பதுமையாராதனை யல்ல). ஆயினும் கடவுளின் அரூபியாதிய உண்மை இலட்சணங்களைக்கூறி அதன்முன் பிரார்த்தனை செய்வதே யன்றி, செம்பே, வெண்கலமே என்று அதைப் பூசிப்பதுமில்லை, அது தான் கடவுள் என்ருவது கடவுள் அந்த உருவமுடையவரென்ருவது நம்புவதுமில்லை. இவ்வாறே கடவுளை இரண்டு மூன்ருகவும், பெண்சாதி புத்திரர் உடையதாக

வும் கூறப்பட்டிருப்பதும், அனைத்தும் தக்க காரணம்பற்றி அவ்வாறு உருவகப்படுத்தப்பட்டவைகளே யன்றி வேறில்லை. இவையாவும் கல்வியில் கீழ்த்தரவகுப்புக் கல்விபோன்றவை. அதாவது மந்தமதியினரும் படிப்படியாய் மேலேறிவரவேண்டியதற்காக ஏற்படுத்தப்பட்டவை. மற்றபடி கடவுள் ஏகர், அனாதி, இரண்டாவ தில்லாதவர் முதலிய அவருடைய சகல இலட்சணங்களும் வேறெதிலும் எவராலும் கூறப்பட்டிராத அவ்வளவு பூரணமாய் வேதத்தில் கூறப்பட்டிருப்பதோடு அவரை யடையவேண்டிய மார்க்கமும் கூறப்பட்டிருக்கிறது. இங்கு இவற்றை விரித்துக் கூற இடமில்லை.

இவ்விஷயங்களில் ஒன்றையு மறியாத சிறுவர்க்கு "நீங்கள் வணங்குவது கல்தானே, மனிதன் செய்ததுதானே. பார்க்கவும், பேசவும், நடக்கவும் முடியாத அது தெய்வமாகுமா. தெய்வத்திற்கு மனிதன்போல் மனைவி மக்கள் இருக்கலாமா" என்பது முதலிய போதனைகளைச் செய்தால், அவர்கள்மனம் என்ன நிலைமையை யடையுமென்பதையும், அத்தகைய மனதில் தெய்வபக்தி எக்காலத்தில் பதியுமென்பதையும் இதைவாசிப்போரே சிந்தித்துணரலாகும்.

இக்காரணங்களால் காலிநகர் வாசியாகிய ம-௱-௱-ஸ்ரீ, நண்பர் தாணுலிங்கம் பிள்ளையவர்கள் எழுதிய விஷயங்களிலும், அவற்றைப்பற்றி சஞ்சிகையில் குறிக்கப்பட்ட மற்ற விஷயங்களிலும் ஐயம் ஒன்றுமில்லையென ஐயங்கொண்ட நமது நண்பர் தெளிவாரென நம்புகிறோம். ஓம் தத்ஸத்.

பத்திரிகாசிரியர்.

பிறர்குற்றங் கூறுவான் தன்குற்ற முணரான்.

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு – பிறர்பிறர்
சீரெல்லாங் கூறிச் சிறுமை புறங்காத்து
யாரார்க்குந் தாழ்ச்சி சொலல்.

உலகத்தில் தோன்றிய மனித வகுப்பாரில், பெரும்பாலார் பிறரைக் காணுதவிடத்து அவர்மீது குறைகூறி, அவரை இழிவாகப் பேசுவதையே பெரும் வழக்கமாகக் கொண் டிருக்கின்றனர். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்துபேர் இந்தக்கெட்டவழக்கத்தை மேற்கொண்டவர்களாகவே யிருப்பார்கள். இன்னவர்தான் இந்த வழக்கத்தைக் கொண் டிருக்கின்றார்கள், இன்னவர் இன்னவர் கைக்கொள்ளவில்லை, என்னும் நியமமும் இதில்கிடையாது; சிறுவர், யௌவன பருவமுடையோர், முதியோர், படித்தோர், படிக்காதவர், ஏழைகள், தனவந்தர் யாவரிடத்திலும் இத்துர்ப்பழக்கமுண்டு சாதுக்களைப்போல் வேடந்தரிக்கும் சாமியார்களையும் கூட இந்தத்துர் வழக்கம் விடுவதில்லை யென்றால் மற்ற எவரைத்தான்விடும்? பெரும்பாலும் மனிதரை இந்தப் பழக்கம் விடுவதில்லை யென்றே கூறலாம். எல்லோருக்கும் நற்போதனை செய்யும் கல்வி கற்றவருங் கூடப் பிறரைப் பழிப்பதில் மிகவும் திருப்தி யுடையவர்களா யிருக்கிறார்கள். இந்தப் பயனற்ற செய்கை மனித வகுப்பாரிடத்தில் மட்டும் இருக்கின்றதே தவிர மற்ற

எந்தப் பிராணிகளிடத்திலு மில்லை. எல்லா ஜன்மங்களிலும் மானிட ஜன்மமே சிறந்ததென்பது சாஸ்திரங்களின் துணிபு. அப்படியிருந்தும் மானிடரிடத்தில் இவ்வழக்க மிருப்பது மிகவும் அருவருக்கத் தக்கதாம். இதில் ஏதாவது பிரயோஜன முண்டோ வென்று ஆராய்ந்தால் ஒருவிதப் பயனு மில்லை. இப்படிப் பிறரைப் பழிக்கின்றவர்கள் குற்றமற்றவர்களோ வென்றால் அவர்களிடத்திலும் எவ்வளவோ ஆபாச குணங்கள் நிறைந்து கிடக்கின்றன. இவ்வாறு தங்களிடத்தில் நிறைந்து கிடக்கும் ஆபாசங்களைச் சிறிதும் நோக்காமலே இவர்கள் அன்னியரை வெகுதிருப்தியோடு பழிக்கின்றனர். இதனாற்றான் “பிறர் குற்றங்கூறுவான் தன் குற்றமுணரான்” என்று பெரியோர் கூறுகின்றனர். தம்குற்றத்தை யுணரும் புத்திமான்கள் பிறரை நிந்திக்க மாட்டார்கள். தங்களிடத்தில் மிகுந்த துர்க்குணங்களை வைத்துக்கொண்டு பிறரைப் பழிக்கின்றவர்களுடைய தன்மைகளைச் சற்று ஆராய்ந்தால், அவை மிகவும் விநோதமா யிருக்கின்றன.

தேகமெல்லாம் புண்ணாகித் துர்நாற்றம் நிறைந்த குஷ்டரோகி ஒருவன், கையில் ஒரு சிரங்குமாத்திரம் உள்ளவனைக் கண்டால் சும்மாவிருப்பதில்லை; ‘ஐயோ! இந்த மனிதன் சிரங்கு என்ன நாற்றம் நாறுகிறது’ என்று கூறுவான்; ‘நாம்தாம் பிறர் நெருங்கமுடியாத ஆபாசத்திற்குள் புகுந்துகொண் டிருக்கின்றோமே’ என்று இவன் சிறிதும் நினைப்பதில்லை. நாளெல்லாம் பொய்யே கூறுகிற ஒருவன் மற்றொருவனைக் கண்டால், ‘இவன் மிகவும் பொய்யன்’ என்று சொல்வான். படிப்பே யில்லாத மூடன் வேறொருவனை, ‘இவன் படிப்பில்லாதவன்’ என்று சொல்வான். இலக்கணம்தெரியாத ஒருவன் மற்றொரு படிப்பாளியைக்கண்டவுடன், ‘இவனுக்கு இலக்கணமே தெரியாது’ என்று சொல்வான்; வாயாடித்தனமாகப் பேசுகிற ஒருவன் வேறொருவனை வாயாடி என்று சொல்வான்; திருட்டுத் தொழிலே புரிகின்ற ஒருவன் அன்னியனைத் திருடன் என்று வாய்கூசாமல் பேசுவான். இதில் இன்னுமொரு வேடிக்கையுண்டு. நற்குண முடையவர்களைத் துர்க்குணமுடையவர்கள் வெகு துரிதமாகப் பழிப்பார்கள். பல்லே தேய்க்காத ஒருவன் நன்றாகப் பல்துலக்கும் ஒருவனைக்கண்டால், ‘இவன் என்ன! வேலையில்லாமல் இப்படிப் பல்லைத் தேய்த்துக்கொண் டிருக்கின்றானே’ என்று ஏளனம் செய்வான். பத்து நாளானாலும் துணி தோய்த்துக் கட்டாத ஒருவன் தினந்தோறும் வேஷ்டி தோய்த்துக்கட்டும் ஒருவனைக் கண்டால் ‘இவன் என்னதரித்திரம்! சும்மாதுணியைப் போட்டு அடித்துக்கொண் டிருக்கின்றானே’ என்று பழிப்பான். பிச்சை எடுக்கும் பரதேசிகூட மற்றொரு பரதேசியைக் கண்டால் தான் பிச்சைக்கு வீடு வீடாகச் சுற்றி அலைவதைக் கொஞ்சமும் நினையாமல், ‘இவன் என்னசாமி! சோற்றுக்குப் பேயாய்த்திரிந் தலைகின்றானே’ என்று பரிகசிக்கின்றான்.

இவ்வாறு ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் குற்றங்களைச் சிறிதும் கவனித்துப் பாராமல் பிறரை நிந்திப்பதால் பயனென்ன? இவர்கள் பிறரால் நிந்திக்கப்படாம லிருக்கின்றார்களா? இவர்கள் மற்றவரை ஒரு பங்கு நிந்தித்தால் மற்றவர்கள் இவரை நூறுபங்காய் நிந்திப்பார்கள். பிறரைப் புறங்கூறிப் பழிப்பதால் தங்களுக்கு மிகுந்த பழிப்புண்டாவ தன்றி வேறெவ்விதப்பயனும் கிடைக்கமாட்டாது. இவ்விதப் பயனற்றகாரியத்தை

மனிதர் என் செய்யவேண்டும்? ஆதலின், இப்பயனற்ற காரியத்தை மனிதர் அடியோடொழிக்க முயலவேண்டும். பிறரிடமுள்ள நற்குணங்களையே எடுத்துப் பேசவேண்டும். இக்குணத்தை யனுசரிப்பவரே இம்மை மறுமைகளில் நற்பயனடைவர்.

S. ரங்கப்பநாயக்கர், உபாத்தியாயர்,
போர்ட் பாடசாலை, காளப்பட்டி,
கோயமுத்தூர் தாலூக்கா.

குறிப்பு—இந்த வியாசம் சுமார் நாலாயிரம் பிரதிகள் அச்சியற்றப் பட்டபின், இது சென்னையில் வெளியாகும் "தருமசீலன்" சஞ்சிகையில் கடந்த மேமீப் பகுதியில் அதன் பத்திராதிபரால் எழுதப்பட்டிருந்ததென அறியலானோம். அந்தோ! நமது சஞ்சிகையில் பன்முறை இந்த இழிவான நடக்கையைப்பற்றிக் கண்டித் தெழுதியிருந்தும் இன்னும் ஓர் உபாத்தியாயரோ இத்தகைய குற்றம் செய்வதை யறிய மிக்க விசனிக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

ஓர் அறிவிப்பு

சந்தாநேயர்களுக்கு அறிவிப்பதாவது: நமது சஞ்சிகையில் ஆரம்பத்திலிருந்து அந்தந்த மாதப்பஞ்சாங்கத்தையே வெளியிட்டுவந்தது யாவருமறிந்ததே. சில சமயங்களில் சஞ்சிகை, மாதம் பிறந்து 3, 5, 7 தேதிகளுக்குப் பின்புகூட சந்தாதாரர்களின் கைக்கெட்டுவதாலும், ரங்கோன், ஸிங்கப்பூர் முதலிய வெளிநாட்டார்களுக்கு 15, 20 தேதிகளுக்குமேல் எட்டுவதாலும், அத்தேதிகள் வரையில் பஞ்சாங்கம் பார்க்கக் கிடைக்காமல் போவதால், அடுத்தமாத பஞ்சாங்கத்தை இம்மாதச் சஞ்சிகையில் வெளியிட்டுவந்தால் எப்போதும் பஞ்சாங்கம் கையில் இருப்பதுபோ லாகுமென்று சந்தாநேயர்களிற் பலர் கேட்டுக்கொண்டனர். அது தகுதியுடையதாகவே தோன்றினமையின் இப்போது அவ்வாறே அடுத்தமாத பஞ்சாங்கத்தை யிம்மாதச் சஞ்சிகையில் வெளியிட்டு வருகிறோம்.

இப்போது சிலர், சஞ்சிகையில் அடுத்தமாத பஞ்சாங்கம் வெளியிடப் பட்டிருப்பதால் சமயத்தில் பார்க்க அனுகூலப் படவில்லை யென்றெழுதுகிறார்கள். இப்போது கையில் இந்தமாத பஞ்சாங்கம் வருகிறமாத பஞ்சாங்கம் இரண்டுமிருக்கின்றன. கடந்தமாதச்சஞ்சிகையை யெடுத்து அதிலுள்ள இம்மாதப் பஞ்சாங்கத்தைப் பார்த்துக்கொள்வது கஷ்டமான காரியமல்ல. ஆகையால் வீணாய் இத்தகைய விஷயங்களைப்பற்றி வரையாதிருக்க வேண்டிக் கொள்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

சிறுவர்களுக்குரிய சிறந்த உபதேசம்

1. காட்டிலே வாழும் சிங்கம், புலி, சிறுத்தை முதலிய சில விலங்கினங்களைப் போல் மனிதர்கள் தனித்து வசிக்கக்கூடியவர்களல்லர். பலர் சேர்ந்து உறவாடி ஒருமித்து வாழ்வதே மானிடர்க் கியற்கையா யிருக்கிறது. ஆகையால் நட்பு என்னும் சிறந்த துணையைத் தேடிக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாம். உலகத்தில் நட்பு, நல்லநட்பு தீயநட்பு என்று இருவகையாயிருக்கிறது. நல்ல நட்பாவது நல்லவருடைய சேர்க்கை. தீய நட்பாவது தீயவருடைய சேர்க்கை. நல்லவரின் சேர்க்கை

யினுல் இன்பமும் தீயவரின் சேர்க்கையினுல் துன்பமும் உண்டாகும். ஆகையினுல் 'நல்லாரோ டிணங்கி யிரு' என்றபடி நல்லவர் சேர்க்கையைத் தேடி அடையவேண்டும். 'தீயாரோ டிணங்கி யிருப்பதுவும் தீது' என்றபடி தீயவருறவை நோய்போல் கருதி விலக்கவேண்டும். 'சர் ஜனநுறவு சக்கரைப் பாகு' என்றும், 'அற்ப ஸ்நேகம் ப்ராண சங்கடம்' என்றும், 'தீயவருறவினும் நல்லவரின் பகைமையே நல்லது' என்றும் நாம் கருதவேண்டும். உண்மையில் நல்லவருடைய பகைமை தீயவ ருடைய நட்பைவிட மேலான நன்மையையே பயக்கும். நல்லவர்கள் தமது பகைவரைக் கெடுக்கவேண்டு மென்கிற எண்ணங் கொள்ளமாட்டார்கள். அவர்களைத் திருத்தவே எண்ணுவார்கள். சமயம் வந்த போது நன்மையைச் செய்து காட்டிச் செய்தபிழையை உணர்த்துவார்கள். அது ஒரு தந்தை தன்னுடைய துஷ்டப் பிள்ளைகளுக்கு நற்புத்தி புகட்டி நல்வழிப் படுத்துவது போலாம். நல்லவர்கள் ஏதேனும் ஒரு காரணம் பற்றிக் கோபங் கொண்டாலும் அந்தக்கோபம் அவர்க ளிடத்தில் நீடித்திராது; "நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே—சீரொழுக சான்றோர் சினம்" என்பது போல் விரைவில் மாறிவிடும். ஆகையால் நல்லவருடைய சேர்க்கையையுடையவர், "பூ வோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்" என்பது போல் நல்ல யோக்கியதையையும் இன்பத்தையும் பெறுவர். நல்லோர் தீயவரை நெருங்கவும் அஞ்சுவர். தீயவை செய்ய மனதிற்கூட எண்ணுர். ஆகையால் அவர்களை எப்போதும் நன்மை என்னும் செல்வம் தொடர்கிறது. அவர்களை யடுத்துப் பழகுகிறவர்களும் தவருமல் நன்மையே பெறுவர். இதனுலே தான்:—

"நல்லோரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லோர்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லோர்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று" என்றுர் மேலோர்.

தீயவர்கள் எப்போதும் பிறருக்குத் தீங்கு தேடி அவ்வழியிலே காலங் கழித்து களித்துத் திரிவார்கள். அவர்கட்கு நன்மை தீமை, மானம் அவமானம்,-என்பன கிடையா. இம்மை, மறுமை என்னும் எண்ணமே யிராது. தெய்வத்தை மறந்து திரிகிறவர்களானபடியால் பெற்ருேர்க் கடங்காத பிள்ளைகளைப் போல அலைந்து திரிவார்கள். தாம் தவறு செய்யும் வழியிலே கெடுவது மன்றித் தம்மைச் சார்ந்தவர்களையும் கெடுப்பார்கள். தம்முடைய வழிக்கு வராத தமது நண்பர்களை விலக்குவதோடு நில்லாமல் பெரும் பகையாகக் கருதி அவர்களுக்குத் தீங்கு பல தேடுவார்கள்; சில சமயம் இரக்கமின்றிக் கொன்ருலும் கொன்று விடுவார்கள்; ஆபத்து வந்த சமயத்தில் தாங்கள் தப்ப வழிதேடிக் கொள்வது மன்றித் தங்களைச் சேர்ந்தவர்களைக் காட்டிக் கொடுத்து விடுவார்கள். "நல்லிணக்கமல்லது அல்லற் படுத்தும்" என்பது முதுமொழியல்லவா? சில சமயம் தீயவர்களாகி அவர்கட்காக அவர்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் மனத்திற்குச் சிறிதும் சமாதான மில்லாததும் நியாய விரோத மானதுமான செய்கையைச் செய்து துன்பப்படுவார்கள். இதனுலேதான் பெரியோர்:—

"தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயோர்சொற் கேட்பதுவுந் தீதே—தீயோர்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது" என்று போதித்திருக்கிருர்கள்.

நல்லோருக்கும் தீயோருக்கும் உள்ள இவ்வேறுபாடுகளை நன்குணர்ந்து பழகுகிறவர்களே நல்வழிப்பட்டுச் செய்வன செய்து ஈசுவரனுடைய திருவருட்குப் பாத்திரமாவார்கள் என் றுணர்ந் துய்வோமாக.

2. சோம்பல், நெடுந்துயில், காலந் தப்பித் துயிலல் இவைகளை முற்றிலும் நீக்க வேண்டும். சோம்பல்,— "சோம்பரேன்பவர் தேம்பித்திரிவர்" என்று கூறியபடி முடிவில் கஷ்டத்தையே கொடுக்கும். நெடுந்துயில்—இது மனிதனுக்குச் சோம்பலைவிடப் பெரிய துன்பத்தைக் கொடுக்கக் கூடியது. இது வேலையைத் தடுக்கும் ஒருபகைவனைப் போன்றது. நஷ்டத்தையும் கஷ்டத்தையும் கொடுக்கும் ஒரு திருடனையும் போல்வது. காலந்தப்பித்துயிலல்—இது முற்கூறிய இரண்டையும் விடக் கொடியது. இது பொல்லாத நோயை யுண்டாக்கும். உலகத்தில் ஒருவன் நோயாளியாயிருப்பதை விட இறந்து ஒழிவது மேலாகுமல்லவா? நோயாளிக்கு என்ன சுகமுண்டு இங்கு? அவன் எதை அனுபவிக்க முடியும்? சிலர் இம்மூன்றையும் இளவயது முதல் பழக்கத்திற்குக் கொண்டுவந்து பிறகு படாதபாடும் அவமானமும் அடைகிறார்கள். ஆகையால் இவைகட்குச் சிறிதுமிடந் தராதிருப்பதே அறிவுடைமை யாக்கும் என்று நன்குணர்ந்து தக்க வழிகளில் நடந்து நற்பயன்களை யடைய முயல்வோமாக.

வரகவி திரு-சுப்பிரமணிய பாரதியார்,
சென்னை.

ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(153-வது பக்கத் தொடர்ச்சி.)

"அக்கஞ் சுருக்கேல்."

"அக்கம்—தானிய விலையை, சுருக்கேல்-குறைக்காதே," என்பது இதன் பொருளாம்.

சிவகங்கை யென்னுந் திருப்பதியிலே, அன்னிய நாட்டிலிருந்து வியாபாரத்தின் பொருட்டுப் போய்க் குடியேறிய சீனிவாசன் என்னும் ஒரு வணிகன் தானிய வியாபாரஞ்செய்து வந்தான். 'ஒரு வணிகன் பிறருடைய பொருளையும் தன் பொருள்போல நினைத்து அவர்களுக்கு வஞ்சனை செய்யாமல், தன் தொழிலுக்கு நீதியாக எவ்வளவு இலாபம் வைக்கலாமோ அவ்வளவு இலாபம் வைத்துச் செய்யும் வியாபாரமே சிறந்ததாகும்' என்று பெரியோர் கூறியிருக்கின்ற நீதியையும், ஒளவைப் பிராட்டியார், 'தானிய விலையைக் குறைக்காதே' என்று கூறியிருக்கின்ற அறமொழியையும் இவன் சிறிதும் கருதாதவனாய், 'தானியத்தையும், பணத்தையும் வீண்செலவு செய்யாமல் நல்வழியில் செட்டாகத் தேடி நல்வழியிற் செலவிடவேண்டும்' என்னும் பொருள்பட, 'அக்கமுங்காசுஞ் சிக்கெனத்தேடு' என்று ஒளவையார் கொன்றைவேந்தனில் சொல்லி யிருப்பதை, தானியத்தையும் பணத்தையும், அனியாயஞ் செய்தாவது இறுக்கம் பண்ணித் தேடிச்சேர்க்க வேண்டு, மென்று தன் அனியாயமான மனப்போக்கிற்குத் தக்கபடி பொருள்செய்து கொண்டு இதையே தக்க ஆதாரமாகவைத்து, 'நாம் அனியாயஞ் செய்தாவது பொருளைச் சம்பாதிப்பதே தகுதி' என்று நினைத்து, தை மாசி மாதங்களில் பக்கத்து ஊர்களிற்போய் மலிவான விலைக்குத் தானியங்களை வாங்கி

வந்து கட்டிவைத்திருந்து, தானியங்கள் அகப்படாத ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் ஒன்றுக்குப் பத்து விலைவைத்து அவற்றை விற்று அனியாய மாக ஊரார் பொருளை அபகரித்து வந்தான்.

சில விவேகிகள் ஔவையின் வாக்கியங்களுக்குத் தகுதியான உரை கூறி நீதியாய் நடக்கும்படி சீனிவாசனுக்கு என்ன கூறியும் அவன் தன் பிடிவாதத்தை விடவேயில்லை.

இப்படியிருக்க ஒருசமயம் உலக அனுபவம் தெரிந்த ஒரு ஜோதிடன் சீனிவாசச் செட்டியாரிடத்தில், 'அடுத்தவருஷம் மழையே பெய்ய மாட்டாது; நாட்டில் பஞ்சத்தால் ஜனங்கள் மிகுதியும் வருந்துவார்கள்; அதற்குத் தகுந்தபடி முன் ஜாக்கிரதையாக நடந்துகொள்' என்று கூறிப் போனார். அவரோ நல்லதை உத்தேசித்துக் கூறினார். இவனோ அதைக் கெட்டவழியில் உபயோகிக்கக் கருதி, 'அடுத்த வருஷத்தில் பஞ்சம் வருவதால் இந்த நாட்டிலுள்ள தானியங்களை யெல்லாம் இவ்வருஷத்தில் வாங்கிக் கட்டிவிட்டால் அடுத்த வருஷத்தில் அதிக விலைக்குவிற்று மிகுந்த பொருள் சம்பாதிக்கலாம்' என்று ஒவ்வொரு பட்டிகளிலும் பெரிய கிராமங்களிலும் புகுந்து அவரவர்கள் கேட்ட விலையைக்கொடுத்துத் தானியங்களை யெல்லாம் வாங்கிக்கட்டினான். நாட்டுப் புறங்களிலுள்ள குடித்தனக்காரர்கள் அடுத்த வருஷத்து விளைவு வருமென்று நம்பி அந்தப்பலன் வரும் வரைக்கும் போதுமான சொற்பதானியங்களை வைத்துக்கொண்டு மீதியை வரிக்கும் வம்புக்கும் விற்றுவிடுவது வழக்கமாகையால் எல்லோரும் தானியங்களைச் சீனிவாசனிடம் விற்று விட்டார்கள். நூறு இருநூறுமயில் விஸ்தீரணமுள்ள சுற்றுப்பக்கத்துக் கிராமங்களி லெல்லாம் தானியங்களே இல்லாமற் போய்விட்டன. அடுத்த வருஷத்தில் விளைவில்லாமல் பஞ்சம் வந்துவிட்டது. ஜனங்களோ சாப்பாட்டுக் கில்லாமல் தவிக்கிறார்கள். சீனிவாசனைத்தவிர வேறுயாரிடத்தும் தானியங்கள் இல்லை. அதனால் ஜனங்கள் அவதிப்பட்டு கையிலிருந்த துணி மணிகளை விற்றுச் சிறிது சிறிது பணஞ் சேகரித்துக்கொண்டு சீனிவாசனிடம் போய் விலைக்குத் தானியங் கேட்டார்கள். அவன், இன்னும் நாலுமாதஞ் சென்றால் இக்கால விலைக்குமேல் பத்துப்பங்கு அதிகம் சம்பாதிக்கலா மென்று கருதி, வந்தவர்களுக் கெல்லாம், 'இப்போது தானியம் விற்கமுடியாது' என்று கடினமாகச் சொல்லி விட்டான். ஜனங்கள் எவ்வளவோ கெஞ்சிக்கதறிப் பார்த்தார்கள். சீனிவாசன் மனதிரங்கவேயில்லை. சிலதினங்கள் கழிந்தபின் ஜனங்கள் பட்டினிக் கஷ்டம் சகிக்க முடியாமல், ஆங்காங்குக் கூட்டங்கூடி, 'இனி சீனிவாசன் வீட்டில் கொள்ளையடிப்பதே சரி, பணத்திற்கும் தானியங்கொடுக்க இசையாத இப்பாவிக்குத் தீங்குசெய்வதால் பாவமில்லை; 'ஆபத்துக்குப் பாவமேது, எத்தனை நாளைக்குத்தான் பட்டினிகிடப்போம்', என்று ஒரே நாளில் திரண்டு சீனிவாசன் வீட்டில் உள்ளவற்றை யெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு போய் விட்டார்கள். 'பேராசை தரித்திரம் தீராத உபத்திரவம்' என்றபடி சீனிவாசன் கையி லொன்றுமில்லாதவனாய், முந்தி ஜனங்கள் பட்டகஷ்டத்தைக் காட்டினும் பதின்மடங் கதிகமான கஷ்டத்தை யடைந்தான். பஞ்சம் தீரும்வரையில் இவன் படாதபாடெல்லாம் பட்டுக் காலத்தைக் கழித்தான்.

சிலமாதங்களில் பஞ்சம் தீர்ந்து நாடுசெழித்தது. குடிகள்க்ஷேமமுற்றார்கள். ஒவ்வொருவரிடத்திலும் தானியங்கள் மலிந்து கிடந்தன. அப்போது

சீனிவாசன் தன்னிடமிருந்த சில நகைகளை விற்றுச் சிறிது பணஞ்சேகரித்துக்கொண்டு மீண்டும் தானியவியாபாரஞ் செய்யலாமென்று நெல்வாங்கும் பொருட்டுக் கிராமங்களுக்குச் சென்றான். சகலருக்கும் சீனிவாசன் அனியாயக்காரனென்று தெரியுமாதலால் ஒவ்வொருவரும் இவனைக் கண்டவுடன், "இந்தப்பாவி எங்கேவந்தான்? இவனுக்கு எவரும் தானியங் கொடுக்காதீர்கள்" என்று அடித்துத் துரத்திவிட்டார்கள். சீனிவாசனுக்கு எங்கும் ஒருநெல்கூட் அகப்படவில்லை. இவன் ஊரூராகத் திரிந்துபார்த்தும் பிண்டத்துக்கே திண்டாட்டமாய் விட்டபடியால், 'இனி இந்நாட்டி லிருந்தால் பட்டினிகிடந்து சாவோம்' என்று அந்தநாட்டை விட்டு வெளியேறி நெடுந்தூரத்திலுள்ள அன்னிய நாட்டிற்குப்போய், "அக்கஞ் சுருக்கேல்" என்னும் ஔவை திருவாக்கை அவமதித்ததாலல்லவா நமக்கு இத்துன்பம் நேர்ந்தது" என்று அது முதல் நீதியாக வியாபாரஞ் செய்யத் தொடங்கினான். அதன்மேல் அவன் கஷ்டங்கள் நிவிர்த்தியாயின.

S. V. ஆறுமுகன்.

பிரதமக்கல்வியும் அதன் ஆசிரியரும்

(149-ம் பக்கத் தொடர்ச்சி.)

சகோதர சகோதரிகாள்! மேற்கண்ட தலையங்கத்தின் முந்திய பாகம் புரட்டாசி௴ 15உக்குள் கனம் பத்திரிகாசிரியர் அவர்களுக்குப் போய்ச் சேரவேண்டி யிருந்தபடியால் பின்னர் வெளிவந்த ஓர் விஷயம் வெளியிடாமலிருக்க என் மனம் தாளவில்லை.

பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்காக உழைக்கும்படி ஏற்பட்டிருக்கும் சென்னை மாகாணச்சங்க இரண்டாவது கான்பரென்ஸ் ஈரோட்டில் நடைபெற்றபொழுது தலைமைவஹித்த ஸ்ரீமான் லாட் கோவிந்ததாஸ் அவர்கள் செய்த உபந்நியாசத்தில் "நம்மாகாணத்தின் தேவைகள்" என்ற விஷயத்தின்பேரில் 15 குறிப்புகள் கூறியிருக்கின்றார்கள். அவை மிக்க தேவையானவைகளே.

ஆனால் கல்வியில் பின்னிற்கிற பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான "கட்டாயப் பிரதமகல்வியின்" அவசியத்தை உரைக்காதது எம்மனத்தைப் புண்படுத்துகின்றது.

"பிராமணரல்லாதார்" என்று கூறும் விஷயமாய் ஒருவரும் மனத்தாங்கல் அடையாதிருக்கக் கோருகிறேன். நந்தம் தேசத்தில் மிச்சமானபேர் பிராமணரல்லாதா ரானபடியாலும் அன்னவர்களே கல்வியில் பின்னடைந்தவர்களானபடியாலும் மேற்கண்டவாறு வரையப்பட்டது. ஆதலின் மனத்தாங்கல் அடைய ஒருகாரணமுமில்லை என்பது என் நம்பிக்கை.

1. இப்பரதகண்டத்தின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான பிரதமக்கல்வியை நடாத்தும் உபாத்தியாயர்களின் நிலைமையைக் கவனித்தால் நம் காருண்ய கவர்ண்மெண்டார் உள்ளமும் நம்தேசத்தின் தேசாபிமான மகாத்மாக்களின் உள்ளமும் உருகி ஆற்று வெள்ளம்போல் ஓடவேண்டுவது அவசியம்.

"எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்" என்ற முதுமொழிக்கிணங்க எலிக்கு பூனையால் நேரும் துன்பத்தைவிட உபாத்தியா

யர்கள் வறுமையின் கொடுமையால் பன்மடங்கு துன்பம் அடைவது "வெள்ளிடை மலைபோற்" காணப்படும். நம்காருண்யம் பொருந்திய கவர்ண்மென்டாரும் தேசாபிமான மகாத்மாக்களும் பராமுகமாயிருக்கின்றார்கள். அந்தோ! என்னபரிதாபம் இவ்வாறு அவர்கள் இருப்பது. ஏழை உபாத்தியாயர்களின் பூர்வபுண்ணியக்குறைவோ அல்லது ஈசன் திருவுள்ளச் சித்தமோ, யாதும் அறிகிலேம். எம் குடல் நடுங்குகின்றது.

4-10-19 ல் நடந்த திருச்சிறுப்பள்ளி ஜில்லா போர்டுமீட்டிங்கில் கவனிக்கப்பட்ட பலவிஷயங்களில் முக்கியமானவைகளில் ஒன்றாகிய "எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களின் பரிதாபநிலை" என்ற தலையங்கத்தைக் கண்ணுறும்போது கண்ணீர் சொரியாதார் யார்? திருச்சி ஜில்லா வித்தியா இலாகா அஸிஸ்டென்டு இன்ஸ்பெக்டர் கனம் டேனியல் அவர்கள் "கிராம உபாத்தியாயர்கள் மிகுதியும் குறைவான சம்பளத்தில் ஜீவிக்கவேண்டி யிருக்கிறதென்றும், பாட அட்டவணைப்படியும் கால அட்டவணைப்படியும் அவர்கள் 5 அல்லது 6 மணி நேரம் உழைக்க வேண்டியிருக்கிறதென்றும், உபாத்தியாயர்களுக்கு ஏமாற்றத்தை உண்டு பண்ணக்கூடாதென்றும், யுத்தப்படி பஞ்சப்படி விஷயமாக ரூபா 4 கொடுக்காவிட்டாலும் 2, 3 ரூபாயாவது கொடுத் துதவவேண்டு மென்றும், அவர்கள் மிகுதியும் கஷ்டப்படுகிறார்களென்றும், கவர்ண்மென்டு பியூன்கள் கூட அதிக சம்பளம் பெறுகிறார்களென்றும், உபாத்தியாயர்களது நிலைமை பரிதாபகரமானதா யிருக்கிறதென்றும், அவர்கள் மாதம் ரூ. 8, 10, 11 வீதம் சம்பளத்தில் காலங்கழிக்க நேரிடுகிற தென்றும் இரக்கப்பட்டுப் பேசி வாதாடினார்" என்று 6-10-19ல் வெளிவந்த "பக்தன்" வாயிலாக தெளிவாகிறது.

முடிவு சப்கமிட்டியின் ஆலோசனைக்கு விடப்பட்டதாகவும் தெரிகிறது.

உபாத்தியாயர்களுக்கு ஏற்பட்ட கிரான்டு விகிதத்தை அதிகப்படுத்திய நம் காருண்ய கவர்ண்மென்டார் ஏழை உபாத்தியாயர்களின் சம்பள விகிதத்தை அதிகப் படுத்தாதிருப்பதுவும், அதிகப்படுத்தச் செய்யாதிருப்பதும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றனவே யொழிய வேறன்று. பிரதமக் கல்வியையும் அதனை நடாத்தும் உபாத்தியாயர்களின் நிலைமையையும் கவனிக்காத பட்சம் இப்புண்ணியபூமி முன்னேற்றம் அடையமாட்டாது. இது திண்ணம். இந்தியாவின் முன்னேற்றம் பிரதமக்கல்வியையும் அதனை நடாத்தும் உபாத்தியாயர்களையும் பொறுத்தே நிற்கின்றது என்பதை யினியேனும் தேசபக்தர்கள் கவனிப்பார்களெனப் பிரார்த்திக்கின்றோம்.

கடைசியாகச் சுருங்கக் கூறுமிடத்து நம்காருண்ய கவர்ண்மென்டாரும், போர்டாரும், மிஷன் கௌன்ஸலரும், சுதேச கனவான்களும் முறையே தங்கள் தங்களால் நடாத்தப் பெற்றுவரும் வித்தியாசாலைகளில் வேலை பார்க்கும் பிரதம உபாத்தியாயர்களின் நிலைமையை நன்கு கவனித்துச் சம்பள விகிதங்களை அதிகப்படுத்தி வேலைகளை உற்சாகமாய்ச் செய்ய ஊக்கம் கொடுத்தால் மட்டும் நம் தேசம் முன்னேற்றம் அடையும்.

நமதானந்த போதினியின் மாதாவும் உபாத்தியாயர்களின் பரிதாப நிலைமைக்காகப் பரிதபிக்கிறவரும் அன்னவர்களுக்குத் தேறுதல் சொல்பவருமாகிய ஆரணி ஸ்ரீமான் குப்புசாமி முதலியாரவர்களும், உபாத்தியாயர்களின் நிலைமையை அஞ்சா நெஞ்சத்தினராய் எடுத்துரைக்கும் வீரசிங்க

மாகிய ஸ்ரீமான் பி. பரிமணப்பல்லவராயர் அவர்களும் இன்னும் மேன் மேலும் பிரதம உபாத்தியாயர்கள் தங்களது கடமையைச் செவ்வையாய் நிறைவேற்ற உற்சாகப் படுத்தவும், அன்னவர்களது பரிதாப நிலைமையைப் போக்கடிக்கத் தங்கள் உடல், பொருள் இவைகளால் உழைக்கும்படிக்கும் நம் அன்பார்ந்த வந்தனத்துடன் வேண்டிக் கொள்ளுகின்றனம்.

2. உபாத்தியாயர்கள் செய்யவேண்டுவனவற்றைக் கவனிக்குங்கால் அன்னவர்களுக்கு என் அன்பார்ந்த வேண்டு கோளாகவே வரைகின்றேன்.

அருமைச் சோதர சோதரிகளே! நம் தேசமுன்னேற்றத்திற்கு நாமே காரணம். நம் ஊழியம் ஏனைய ஊழியத்தைப் போலன்று. தரும ஊழியம்.

கற்றவர்களிடமும் பொதுவாக கல்வி இலாகாவைச் சார்ந்தவர்களிடமும் செல்வம் சேராவிடினும் இவ்வுலகில் அறம், பொருள், இன்பம் ஆகிய முச்சுடரை சரியானபடி அனுபவிக்கா விட்டாலும் நாம்செய்த, செய்துவருகிற, செய்யப்போகிற இத்தரும ஊழியத்தினுல் வீடு என்று சொல்லப்பட்ட மோட்சபதவி நாம் இம் மண்ணுலகு விட்டு விண்ணுலகேகுங்கால் ஆயத்தமாயிருக்கிறது. ஆதலான் நாம் நம் தொழிலை வழுவாது நடத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அஸ்திபாரமாக இருக்கும் பிரதமக் கல்வியை நாமும் நாம் முன்கூறியபடி, ஸ்ரீமான் கோகலே, தாதாபாய் நௌரோஜீ என்பவர்களின் ஆன்மாக்கள் எவ்வாறு இந்திய சீர்திருத்தங்களைக் கண்டு களிப்படையுமோ, அவ்வாறு இந்தியாவின் முன்னேற்ற காலத்தில் நம் ஆன்மாக்களும் கண்டு களிப்படையும் என்பதை மனதில் பதித்து உண்மையாகவும், ஊக்கமாகவும், உற்சாகத்தோடும், தேசாபிமானம் பூண்டு, பாஷாபிமானம் தரித்து நம்வேலையை வழுவாது நிறைவேற்றுவோமாக. எல்லாம் வல்ல பரம் பொருள் நம் கஷ்டத்தினை நிவர்த்திசெய்வார்.

இவ்வருடம் ஜூன்மா'தம் குன்னூரில் கூடிய கிறிஸ்தவப்பாதிரியார்களின் கூட்டத்தில் தலைமை வகித்த சென்னை லார்ட் பிஷப்பவர்கள் கவர்ண்மென்டை அனுசரித்த கல்வி கிராமவாழ்க்கைக்கு ஒத்ததாயில்லையென்றும் கல்விப்பயிற்சி கிராமஜனங்களின் வாழ்க்கைக்கு ஒத்ததாயும் பொருளாதார விஷயங்களுக்குப் பயன்படக்கூடியதாயு மிருக்கவேண்டும் என்றும் கூறியிருக்கின்றார்கள். அவ்வண்ணமே நம் தேசாபிமானிகளும், பாஷாபிமானிகளும் கூறுகின்றனர். தேசாபிமானம், பாஷாபிமானம் தரித்த பத்திரிகா ரத்தினங்களும் கூறுகின்றன. ஆகையால் பிள்ளைகளின் பிற்கால வாழ்வுக்கேற்றபடி பிரதமக் கல்வியை நடத்துவது அவசியமென்று நன்கு விளங்குகிறது. இதுவே முக்கியம். இந்தியாவின் முன்னேற்ற நிலைமைக்கு இதுவே பிரதானம்.

மேலும் இதுவே போதனுமுறையில் பாண்டித்யம் பெற்ற புரோபெல் என்பவரின் பாலபோதனு முறைகளில் சிறந்தது.

மேல்நாட்டாரும், கீழ்நாட்டாரும் சங்கங்களாலும், பத்திரிகைகளாலும் முன்வந்தார்களென்பது "மலைமேல் ஏற்றியவிளக்கைப்போல்" தெரியக்கிடக்கின்றது. நம் இந்தியாவும் 64 கலைக்ஞானங்களில் பாண்டித்யம் பெற்ற பண்டிதர்களாலும், முதல், இடை, கடை என்ற முச்சங்கங்களா

லும், அநேகவித்வான்களாலும், முன்னேற்றம் அடைந்திருந்தது. நம்தேசம் செய்த பூர்வ புண்யக் குறைவோ அல்லது நம் தேசத்தின் துர் அதிஷ்டமோ க்ஷீணதிசை அதை நோக்கிற்று.

தற்சமயமோ முன்னிருந்த உயரியநிலைமையை அடையப்பத்திரிகைகளும், சங்கங்களும் தோன்றியிருக்கின்றன. சங்கங்கள், பத்திரிகைகள் மூலமாய்த் தங்கள் தங்கள் குறையை நிவிர்த்திக்க அறிஞர் முற்பட்டிருக்கின்றார்கள்.

ஆனால் நமக்கென்று நம் காருண்ய கவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப் பட்ட சங்கங்களால் நாம் யாதொரு பிரயோஜனமும் அடைந்து வருகிற தாக என் சிற்றறிவுக்கு எட்டவில்லை.

மாதமொருமுறை ஏதோ சிறிதுநேரம் கூடி காலக்கழிக்கிறதாகவே தெரிகிறது. சங்கங்கள் எதற்காக? நம் அறிவை விர்த்திசெய்யவும் நம் குறையைத்தீர்க்கவு மன்றோ ஏற்பட்டிருக்கின்றன.

மாதிரிப்பாடம் நடத்தினால் போதுமா? நமக்கென்றுலவி வரும் பத்திரிகைகளைப் படித்தால் போதுமா? வியாசங்கள் எழுதி வாசித்தாற்போதுமா? உபந்யாசம் புரிந்தாற்போதுமா?

நம் குறையை நம் காருண்ய கவர்ண்மெண்டாருக்கும் நம் கல்வி இலாகா தலைவர்களுக்கும் தெரிவிக்க வல்லோ வேண்டும்.

நாம் நம் சங்கங்களின் மகாநாடுகள் கூட்டி நம் குறைகளை ஏன் நம் காருண்ய கவர்ண்மெண்டாருக்குத் தெரிவிக்கக் கூடாது? இனிமேலாவது முயற்சி செய்வோமாக. "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்ற நீதியைக் கடைப்பிடித் தொழுகுவோமாக.

கடைசியாக நம் தோட்டமாகிய பாடசாலையில் பயிர்களாகிய இளங் குழந்தைகளின் நிலமாகிய இருதயகமலத்தில் அடக்கமாயிருக்கும் அறிவை விருத்திசெய்ய நமக்கு ஊற்று அவசியம்.

நாம் பற்பல புத்தகங்களும், பற்பல பத்திரிகைகளும் நித்தமும் வாசித்து உய்த்துணரவேண்டும். இதை யெண்ணியே நம் ஔவையம்மையார் "ஓதுவ தொழியேல்" எனச்சாற்றிப் போந்தனர்.

முடிவுரையாக நாம் நம் வேலையை யாதொரு வழுவுமின்றி நடத்துவோமாக. நம் குறையை நம் சங்கங்களின் மூலமாக நம் காருண்ய கவர்ண்மெண்டாருக்குத் தெரியப் படுத்துவோமாக. நமக்கு உதவிசெய்ய தேசபக்தர்களை உற்சாகப் படுத்துவோமாக.

பத்திரிகைகள் மூலமாய் நித்தமும் ஓலமிடுவோமாக. பத்திரிகா ரத்தினங்களை உயர்ந்த பூஷணமாகக் கொள்வோமாக.

ஆனந்தபோதினியை நம் குருவாக எண்ணி அது போதிக்கும் சத்விஷயங்களை மனத்தில் பதித்து ஊன்றிச் சிந்திப்போமாக.

தேசபக்தர்களே! அமிர்தசரஸில் கூடப்போகும் காங்கிரஸ் மகாசபையிலும், திருப்பூரில் கூடப்போகும் சென்னை மாகாணச்சங்க 3-வது கான்பரென்ஸிலும் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அஸ்திபாரமாகவுள்ள பிரதமக்கல்வியைப் பற்றியும் அதனை நடத்தும் உபாத்தியாயர்களின் நிலைமையைப் பற்றியும் கவனிக்க வேண்டுகின்றேன்.

நீங்கள் உலகெங்கும் வியக்க விளங்குவீர்கள்.

நம்தேசம் மற்ற ஏனைய தேசங்களைப்போல் செழித்து வாழும். நாம் முன் அடைந்த கல்வி, செல்வம், ஆசாரம் ஆகிய முச்சுடரைத் திரும்பவும் பெற்று சதா இன்புற்று வாழ்வோம்.

எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக. சித்தியடைவோம்.

யான் இப்போது கூறியுள்ள முடிவுரையானது இத்தோடு முடிவடையும் வாக்கியங்களாயிராமல் முடிவுரையில் கண்டபடி ஒவ்வொருவரும், ஒவ்வொரு தேசாபிமான, பாஷாபிமான மகாத்மாக்களும் முன்வந்துழைக்கும்படி தாழ்மையாய் வேண்டுகிறேன். சுபம்! சுபம்!!

S. ஏசுதாசன், க்ஷத்திரிய வித்தியாசாலை,
கல்லூருணி, அருப்புக்கோட்டை தாலுக்கா.

சந்தா நேயர்கட்கு ஓர் அறிவிப்பு

கடந்த இரண்டு சஞ்சிகைகளில் சித்தூர் அஸ்மத் அண்ட் கம்பெனியாரனுப்பிய "வறுமை யொழிந்தது" என்ற விளம்பரத்தைப் பிரசுரித்து வந்தோம். அதைப்பற்றி நம் சந்தா நண்பர்களில் சிலர் நம்மைச் சந்தேகத்தோடு விசாரித்ததால், ஒரு ரூபாய்க்கு அக்கம்பெனியார் எழுதியனுப்புவதாய்ப் பிரசுரித்த இரகசியத்தின் நகலை நமது பார்வைக்கனுப்பும்படி கேட்டோம். அவர்களால் அனுப்பப்பட்ட (இரகசியம் என்று அவர்கள் வெளியிட்ட) துண்டுப்பத்திரிகையைக் (பின்னல் வேலைசெய்யும் எந்திரங்களைப்பற்றிய விளம்பரம் எனலாம்) கண்டதே நாம் இத்தகைய விளம்பரத்தை நமது ஆனந்தனில் பிரசுரிக்க என் சம்மதித்தோம் என்று மிக்க மனவருத்தமுற்று, இனி பிரசுரிக்க மறுத்து விட்டு, இம்மாதத்திற்கு அவர்கள் அனுப்பிய விளம்பர விகிதத்தையும் திருப்பி யனுப்பிவிட்டோம். முதலில், ஒருரூபாய்க்குத்தக்க புத்தகரூபமாய் வெளியிடப்பட்ட கைத்தொழில் சம்பந்தமான இரகசிய உளவுகள் அனுப்பப்படும் என்று நம்பியே அதைப் பிரசுரித்தோம் என்பதை நமது நேயர்கள் பூரணமாய் நம்புவார்களென்றே கருதுகிறோம்.

பத்திராதிபர்.

விதியும் மதியும்

[இது 20-10-1919 தேதி லோகோபகாரியில் வெளிவந்தவிஷயம்.]

"ஆனந்த போதினி" யின் 17-9-1919 தேதியுள்ள சஞ்சிகையில் மேற்கண்ட தலைப்புடன் வந்த குறிப்பைக் கண்டு இதை எழுதத் துணிந்தோம். நாம் எழுதும் விஷயம் விதியே பெரிதென்றும் மதியே பெரிதென்றும் கூறிவரும் இரு திரத்தாராலும் ஒப்புக்கொள்ளப்படும் என்பது எமது நம்பிக்கை.

கேள்வி—ஒருவர் ஒரு கேள்விகேட்டால், கேள்வியை நன்கு யுணர்ந்து கொள்ளாமல் அதற்குப் பதிலளிப்பது, கேள்வி கேட்போ ரபிப்பிராயத்தை விடையளிப்போரும், விடையளிப்போ ரபிப்பிராயத்தைக் கேள்வி கேட்போரும் அறியாமலே இருவரும் வாதம்புரிந்து முடிவில் ஒரு தீர்மானமுமின்றிக் கேள்வியும் பதிலும் வீண் பேச்சாகவே ஆய்விடுமாதலின் நமது கேள்வியை ஆராய்வாம். கேள்வி கேட்கும் எமதன்பர்கள் இருவகையான அபிப்பிராயங்களோடு கேள்வி கேட்கும் இரு திறத்தாராகப் பிரிக்கப்படலாம்.

(1) "நமக்குவரும் நன்மை தீமைகள் விதியினால் வருகின்றனவா? மதியினால் வருகின்றனவா? விதியினால் நமக்குவரும் கஷ்டங்களை மதியினால் நீக்கிக்கொள்ளல் முடியுமா? முடியுமெனின், மதி பெரிதென்போம், இல்லை எனின் விதியே பெரிதென்போம்" என்பவர் ஒரு சாரார். இவர்க

ளுள் "விதியை நம்பி நாம் சும்மா விருக்கலாமா? மதியை நம்பி நல்வழியில் முயற்சிக்கலாமா?" என்னும் கேள்வியைச் சிலர் கேட்பர். சிலர் அக் கேள்வி எமக்கு வேண்டா மென்பர்.

(2) "விதியை நம்பினால் நாம் நன்மையடைவோமா? மதியை நம்பினால் நன்மை யடைவோமா? விதி சுவதந்திரமானதா? மதி சுவதந்திரமானதா? நாம் நன்மையை அடைய விரும்பினால் என்ன செய்தல் வேண்டும்? மதியை நம்பினால் நன்மையுண்டெனில் அது பெரிதென்போம். மதியினால் யாதொரு காரியமுமாவதில்லை, அதனால், நன்மை யுண்டாகாதெனின் விதி பெரிதென்று மனம்போன வழிச் செல்வோம்" என்பர் மற்றொரு சாரார்.

விடை (1) முதல் சாராருக்குக் கொடுக்கும் விடை:— "நமக்குத் தற்காலம்வரும் நன்மை தீமைகள் விதியினால்தான் வருகின்றன. விதியினால் வரும் கஷ்டங்களை எவ்வகையிலும் மதியினால் போக்குதல் முடியாது. காலில் கல்லைப்போட்டுக்கொண்டவன் கட்டாயம் கஷ்டப்பட்டுத்தான் தீர வேண்டி யிருப்பதுபோல, முன்னே பாபம் செய்தவன் கட்டாயம் இப்போது கஷ்டப்பட வேண்டியது விதியே. காயத்திற்குப்பிளாஸ்திரி போட்டுப் பரிகாரம் செய்து தணிக்கை செய்வதுபோல மதியினால் கிஞ்சித் பரிகாரம் செய்தல் முடியும். விதியினால் தற்காலம் வந்திருக்கும் கஷ்டத்தை மதியினால் வென்றுவிடல் முடியாதாதலின், இவ்விஷயத்தைப் பொறுத்த மட்டில் விதிதான் பெரிது. என்றாலும், விதியினால் கஷ்டப்பட நேரிடும். அக்காலத்திலும்கூட மதி உங்களுக்குத் தோழனாயிருந்து உதவும்-ஆறுதல் சொல்லும் என்பதை மறவாதேயுங்கள்." என்பதும், அவர்களுள் ஒருபகுதியினராய் "விதியை நம்பிச் சும்மா விருக்கலாமா? மதியை நம்பி நல்வழியில் முயற்சிக்கலாமா?" என்பவர்களுக்குக் கொடுக்கும் விடை "தற்கால சுக துக்கங்களை யனுசரித்தவரை விதி பெரிதே யொழிய, நமது பிற்கால நன்மை தீமைகளை யுத்தேசிக்குமிடத்து நாம் தற்காலத்தில் செய்யும் புண்ணிய பாபங்களே அவற்றிற்குக் காரணமாயிருந்து மேல்விதியைச் செப்பஞ் செய்வதாயிருத்தலின், நாம் தற்காலம் மதியை (புத்தியை)த் துணையாகக் கொண்டு செய்யத் தகுவனவாய நற்கருமங்களை ஆராய்ந்தறிந்து செய்தல் வேண்டும். விதி வழியே ஆவது ஆகட்டும் என வாளாவிருத்தல் கூடாது. தேகமும் மனமும் உடையவர்களாய் நாமிருக்கும் வரையிலும் சும்மா விருத்தலும் முடியாத காரியம்" என்பதுமாம்.

(2) மற்றொரு சாராருக்கு அளிக்கும் விடை:—"மதியை நம்பினால் நன்மையை அடையலாம். விதியி (பிராரப்தத்தி) னால் வரும் கஷ்டங்களை மதியினால் நீக்கல் முடியாது. உதாரணமாக, ஒருவன் திருடியதால் ஆறு மாதம் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டான். அவன் திருடியதற்காக ஆறுமாத ஜெயில் வாசம் செல்லவேண்டுவது விதியே யொழிய, ஜெயிலிலிருக்கும் போது ஜெயிலதிகாரிகளால் அவன் துன்புறுத்தப்படுவானா, மரியாதையாக நடத்தப்படுவானா என்பது விதியைப் பொறுத்ததன்று; அத்திருடனது மதியைப் பொறுத்தது. ஜெயிலில் அவன் துஷ்டனாக நடந்துகொண்டால் துன்புறுத்தப்படுவான்; நல்லவனாக நடந்துகொண்டால் மரியாதையாக நடத்தப்படுவான். ஜெயிலிலிருந்து விடுபட்ட பிறகும் அவனது நன்மை தீமைகள் அவனது மதியைப் பொறுத்தே நிற்கும். அதுபோல விதியினால் கஷ்டப்படும்போதே நாம் மதியினால் வேறு நன்மைகளை அடையலாம்; பிறகும் மதியினால் நன்மையை அடையலாம். விதி முன்னர் நாம் செய்துள்ள பாப புண்ணியங்களுக்கேற்ப ஈசுவரனால் நியமிக்கப் படுதலின்

சுவதந்திர முடையதன்று. வில்நாணிலிருந்து விடுபட்ட அம்பை பிறகு எய்தவனும் வசப்படுத்த முடியாதெனினும் அம்பு சுவதந்திரமுடையதாமோ? மதி தன்னைத் துணையாகக்கொண்டு காரியம் நடத்துபவனுக்குச் சகல நன்மைகளையும் தானே தரவல்லதாதலின் சுவதந்திரமுடையதேயாம். விதிவழி யாகட்டுமென்று அமாவாசை யிருளில் விளக்கில்லாது காட்டு வழியில் நடக்கும் மூடன் கட்டாயம் துன்புறுவன். மாயையிருளுடன் கூடிய பிறவிக்காட்டில் வழி தெரிந்து நடக்க ஈசுவரன் நமக்கு மதியாகிய விளக்கை அளித்திருப்பதால், விதிவழி யாகட்டுமென்று மனம்போன போக்கெல்லாம் போகாமல் மதியைத் துணையாகக்கொண்டு நன்மையை அடையுங்கள். சுவதந்திரமுடையதும் நன்மையை அளிப்பதும் மதியேயாதலின் மதியேபெரிது" என்பதாம்.

ஆட்சேபம்.—இடையே மூன்றாவதொரு சாரார் வந்து "மார்க்கண்டேயன் மதியால் விதியை வென்றான். ஆகையால் 'விதியி(பிராரப்தத்தி)னால் வரும் கஷ்டங்களை மதியினால் நீக்கல் முடியாது' என்று கூறுதல் கூடாது" என்று ஆக்ஷேபிக்கின்றனர்.

சமாதானம்.—அவர்களுக்குச் சொல்லும் சமாதானம்: "பரீக்ஷித்து மஹாராஜன் தன் விதியின்படி பாம்புகடித் திறந்துவிடுதலை நீக்கும் பொருட்டுச் சமுத்திர மத்தியிலே கோட்டைகட்டி வசித்திருந்தும் பாம்பு எலுமிச்சம்பழ ரூபமாக ராஜன் சபையின்கண் வந்து தீங்கு விளைத்துவிட்டதென்னும் இதிகாசத்திற்கு நீவிரென்னபதில் கூறுவீர்? ஆயினும் மதியைத் துணையாகக்கொண்டு அதிகமான பிரயத்தனத்தால் விதியை வென்றுவிடலாம் என்னும் தீர்மானத்தை என் மூளைக்கெட்டின வரையில் நான் ஒத்துக்கொள்வதற் காட்சேபனையில்லை. உலகில் மதியைத் துணையாகக்கொள்பவரும் மார்க்கண்டரைப்போன்று அபரிமிதமான முயற்சியைச் செய்பவரும்தான் காணோம்" என்பதேயாம்.

முடிவு.—இனி நான்காவதொரு சாரார் வந்து "மதியும் பெரிது, விதியும் பெரிது என்று இருவருக்கும் பதில் சொல்லிக் குழப்பிவிடுவது நலமன்று. இரண்டிலொன்றைப் பெரிதென்று எவ்வகையிலாவது பிறர் ஆக்ஷேபிக்காதபடி தீர்மானமாகச் சொல்லல் முடியுமாயின், சொல்லும்; முடியாவிட்டால் உமது பேச்சு எமக்கு வேண்டா"மென்பர். அவர்களுக்கும் ஒருவாறு சமாதானம் சொல்லுவாம்.

காரியகாரண வகையால் நோக்குமிடத்து மதிதான் பெரிது என்பது துணியப்படும். அஃதெங்ஙனம்? மனிதரில் சிலருக்கு நல்விதியையும், சிலருக்குக் கெட்ட விதியையும் பிரம்மா என் விதிக்கிறார். அவர் பக்ஷபாதமுடையவரோ? என ஆராயுமிடத்துப் பிரம்மா தம்மிச்சையால் எதையும் விதிப்பதில்லை என்பதும் அவரவர்களின் பாப புண்ணியங்களுக்கேற்ப அவர் விதிக்கிறார் என்பதும் பெறப்படுவனவாம். அப்பாப புண்ணியங்களோ ஜீவர்களுடைய கர்மங்களா லுண்டாயனவாம். மதியுடன் ஆராய்ந்தறிந்து செய்யும் வினை புண்ணியத்தையும், மதியின்றிக் கண்மூடித்தனமாக மனம்போன போக்காகச் செய்யும் வினை பாபத்தையும் விளைவிக்கும். "விதிசெய் கர்த்தா வினைசெய்யுயிரே. ஆதலால், விதியை மாற்றிட வினையை மாற்றுக" நன்மதியுடன் செய்யும் காரியம் நல்வழியையும், துன்மதி (மதியைத் துணைக்கொள்ளாமை) யுடன் செய்யும் காரியம் கெட்ட விதியையும் சிருஷ்டிப்பதா யிருத்தலின், மதி காரணமும் விதி காரியமுமாமென்பது பெற்றாம். எனவே, எனதன்பர்களே! மதியே பெரிது. மதியை

வளருங்கள்! அதன் வழி நில்லுங்கள்! மாட்சிமை யடையுங்கள்.

அன்பன், ச. கந்தசாமி முதலியார்.

குறிப்பு:—மேற்கண்ட வியாசத்தில் நமது நண்பர் கூறிய விஷயங்கள் யாவும் யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கவைகள்தாம். ஆனால் அவர் முடிவுரையாய்க் கூறியபாகத்தில் "மதியே பெரிது" எனத் தீர்மானித்து விட்டதைப் பற்றிமட்டும் நாம் இரண்டொரு வாக்கியங்கள் கூற வேண்டி யிருக்கிறது.

நாயனர் "ஊழிற் பெருவலி யாவுள மற்றென்று—சூழினும் தான் முந்துறும்" என்று ஊழைப்பற்றிக் கூறியதில், ஊழிற்குள்ள வலியைத் தடுக்க வேறெதுவுமில்லை யென்று முடிவுரையாய்க் கூறிவிட்டது வெளிப்படை. இப்போது நமது நண்பர் காரணகாரியம்பற்றி "மதியே பெரியது" என்கிறார்.

இப்போது நமது விஷயம் " அறிவு பெரிதா கர்மம் பெரிதா? என்ற பொதுக் கேள்வியல்ல. அறிவாகிய மதி தவறிச் சென்றதால் ஏற்பட்ட ஊழ்வினையை அதேமதி தடுக்கும் ஆற்றலுடையதா என்ற தீர்மானத்தின் மேல் எது பெரிது என்று கூறவேண்டிவருகிறது. ஊழ்வினைக்கு மதியே காரணமாயினும், அவ்வினை உண்டாக்கப்பட்டபின் அம்மதியால்கூட அதைத்தடுக்க முடியாதென்றே யேற்படுகிறது. ஒரு அம்பை வில்லினின்று விட்டுவிட்டபின் அதைவிட்ட வேடனாலேயே யந்த அம்பைத் திருப்ப முடியாதென்று நமது நண்பர் மேலே கூறியதே யிதற்குத் திருட்டாந்தமாம். ஆதலால் இச்சந்தர்ப்பத்தில் மதிபெரிதென்று கூறவழியில்லை. இதைக்கொண்டே விதியே பெரிதென்று கூறலாமெனின், மதி, விதியை யடியோடு தடுக்கமுடியாதெனினும், அதன் கொடிய ஆற்றலை நாம் ஒருவாறு உணராது சாந்தப்படுத்தக்கூடும். அதோடு மதி முன்சாக்கிரதையோடு சரியான வழியிற் சென்றால் தீயஊழ் உண்டாகாவண்ணம் இனியேனும் தடுக்கக்கூடும். ஆகையால் விதியே பெரிதென்று கூறவும் வழியில்லை.

இக்காரணங்களால் "விதி பெரிதா மதி பெரிதா? என்ற கேள்விக்கு விடை இன்னதுதான் பெரிதென்று ஒரு பட்சமாய்க் கூறக்கூடியதல்ல" என்று சஞ்சிகையின் 89-வது பக்கத்தின் இறுதியில் நாம் கூறியுள்ளது நியாயமே யென்பது இதைவாசிப்போர்க்கு நன்கு விளங்குமென நம்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.

கற்கோட்டை—நாவல்

(159-ம் பக்கத் தொடர்ச்சி)

இக் கடிதத்தை வாசித்ததே பிரபுவிற்குப் பின்னும் பெருந்திகிலுண்டாகி விட்டது. அபாயமான வலை தன்னைச் சூழ்ந்து நெருங்குவதுபோலிருந்தது. திரவியசிங்கம் பிரபு தப்பித்துக் கொண்டான் என்றால் அவன் சகோதரர் கூறியபடி மன்னிப்பு எப்படிக் கிடைத்தது? அவன் தப்பித்துக் கொண்டவுடனே மன்னிப் பளித்திருக்க வேண்டும் என்று பிரபு கருதிக் கொண்டார். இராணியின் கணையாழிக்கு முன் வேறுவிதமாய்ச் சந்தேகங் கொள்ளவழியில்லை. பிரபு இவ்வாறு கலவரத்தோடு சிந்தித்துக்கொண்டேயிருக்கையில் அறையின் கதவு திறக்கப்பட்டதும் திரவியசிங்கம் பிரபுவின் சகோதரர்களாகிய ஸர்தார் குணலிங்கம் பிரபுவும் விக்கிரமநாதம் பிரபுவும் உள்ளே பிரவேசித்தார்கள்.

அவர்களைக் கண்ட சுந்தரநாயகம் பிரபு உடனே தம் துயரத்தையும் திகிலையும் மறைத்து, மிக்க சந்தோஷத்தோடு அவர்களுக்கு நல்வரவு கூறு

கிறவர்போல் அபிநயிக்கத் தொடங்கி, "ஆ என் சகோதரி புதல்வர்களே! வாருங்கள், வாருங்கள்! நீங்கள் என் மாளிகைக்கு வராமல் நெடுநேரம் கரும்பூரி விருக்கமாட்டீர்க ளென்று நான் அறிவேன். ஏதோ ஆலிங்கனம் செய்துகொள்ளட்டும்!" என்று மூத்தவனை நோக்கி நெருங்கினர்.

மூத்தவனாகிய குணசிங்கம் பிரபு "இரு, அப்படியல்ல" என்று சட்டென்று பின்னிடைந்து நிமிர்ந்து நின்று கடுமையாய் உற்று நோக்கினர்.

சுந்தரநாயகம் பிரபு.—"ஓகோ! அவதூறு மொழிகளுக்கு நீங்களும் செவி கொடுத்து விட்டீர்களோ!" என்றார்.

இதைக்கேட்ட இளையவன்.—"என்! உமது மனசாக்ஷியே யுமக்குக் கூற வில்லையா. தெய்வமே உம்மைப் பெரும் பாதகத்திற் குள்ளாக வொட்டாது தடுத்து விட்டது. நீர் முதலில் எங்கள் சொந்த தமையனையும் பிறகு எங்கள் சிறியதாய் புதல்வனாகிய கண்ணபிரானையும், உமது சகோதரிகளின் மக்களென்பதைக்கூடக் கவனியாமல், சதிசெய்துக் கொன்றுவிடப் பார்த்தீர்........." என்றதே,

பிரபு கலக்கமடைந்து, என்ன! என்ன நீ கூறுவது! என்றார்.

மூத்தவன்.—"உமக்கு ஒரு அவமானம் நேர்ந்தால் அது நமது குடும்ப முழுமையும் சாரும். ஆகையால் உமது சதிச்செயலை பகிரங்கப்படுத்தி யும்மைத் தண்டனைக் குள்ளாக்க எங்களுக்குப் பிரியமில்லை. அதை யடக்கிவிடவே பிரியம். ஆயினும் அதை ருசுப்படுத்தக்கூடிய அடையாளமாகிய அந்த எந்திரப் படிக்கட்டை யடியோ டழித்துவிடவேண்டும். மேலும் பின்னல் நீராவது இங்கு வசிக்கும் வேறு யாராவது இன்னொருவருக்கு அத்தகைய சதிசெய்வதற்கு இடமிருக்கலாகாது" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே பிரபுவிற்குச் சற்றுதைரியமுண்டாய்விட்டது. மணவாளன் படிக்கட்டு விழாதபடி கடந்த இரவு மரையாணிகளை முடுக்கிவிட் டிருப்பானுதலால் இவர்களைச் சுலபமாய் ஏமாற்றி விடலாமென்று தீர்மானித்துக்கொண்டு, பிரபு இருவரையும் நோக்கி,

"இதென்ன அபவாதம் நீங்கள் கூறுவது? எனக்கொன்றும் புலப்படவில்லை. என் சுற்றத்தார்களா யிருப்பதால் நான் கோபிக்காம லிருக்கிறேன்" என்றார்.

சகோதரர்கள்:—"வீணய் எங்களுக்குக் கோபமூட்டவேண்டாம். நாங்கள் இதையடக்கி, உம்மை மன்னிக்க வந்ததற்கு நீர் வந்தனமளிக்க வேண்டும். ஏமாற்ற முயலவேண்டாம்" என்றார்கள்.

பிரபு.—என்ன இது விடுகதையா யிருக்கிறதே! நீங்கள் கூறுவதுதான் என்ன?

சகோதரர் சற்று கோபத்தோடு "என்! உனக்கு மன்னுப்பு காட்டுவது தகாதுபோ லிருக்கிறது. மேல்மாடிக் கேறும் வடக்குப் பக்கப் படிகளில் 13-வது படியில் ஒருவன் கால்வைத்ததே, அதுவும் சில படிகளும் அடியில் கவிழ்ந்து அம்மனிதன் பாதாளக் கிணற்றில் விழுந்து மடியும்படி சூத்திரம் வைக்கப்பட் டிருப்பது எங்களுக்குத் தெரியாதென்று ஏமாற்றப் பார்க்கிறாய்" என்றார்கள்.

பிரபு "ஓகோ, உங்கள்மேல் கோபிக்கலாகாது. நீங்கள் ஏதோ மதி மயக்கம் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குப் பிரத்யக்ஷமாய் நிரூபித்து விட்டுப் பிறகு பேசிக்கொள்கிறேன்........" என்றதே, சகோதரர் இருவரும் கலவரமடைந்து விட்டார்கள். நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள்.

பிரபு.—" வீண் வாதத்தில் பயனில்லை. எழுந்து வாருங்கள் " என்று இரு வரையும் அழைத்துக் கொண்டு போய் படிகளின் அடியில் நிறுத்தி " இந்தப் படிகள்தானே !" என்றார்.

மூத்தவன் " ஆம். மேலுக்குப் பார்த்தால் ஒழுங்காய்த்தான் இருக்கிறது " என்றான்.

பிரபு.—" இதன்மேலேறிச் சென்றால் ஆபத்து நேருமென்றுதானே கூறுகிறீர்கள் ?" என்றார்.

இளையவன் ஆம் 12 படிகள் வரையில் ஆபத்தில்லை. 13 வதில் கால் வைத்தால் ஆபத்தே யென்றான். பிரபு " சரி நீங்கள் இங்கேநின்று பாருங்கள், படிகளைச் சரியாய் எண்ணிக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு, ஒவ்வொரு படியையும் எண்ணிக்கொண்டே கால்வைத்தேறத் தொடங்கினார். சகோதரர் அடடா ! ஏது நமக்கே மானபங்கம் நேரிடும்போ லிருக்கிறது என்று மனங்கலங்கி நின்று பார்த்துக்கொண் டிருந்தார்கள். பிரபு ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக் கொண்டே தட் தட் என்று காலைவைத்து ஏறிக்கொண்டே சென்று 12 - ம் படியானதும், பாருங்கள் இதோ பதின்மூன்று என்று உரத்துக் கூறிக்கொண்டே காலைத்தூக்கிப் பலமாகவே தட்டென்று வைத்தார்.

அவர் பதின்மூன்று என்று கூறி முடிப்பதற்குள் கோவென்றலறினார். அதேவினாடி தடாலென்று படிகள் விழுந்ததும் சுந்தரநாயகம் பிரபு தாம் பிறருக்கு வெட்டிய பாதாளக் கிணற்றில் தாமே விழுந்து மறைந்தார். சகோதர ரிருவரும் ஆ ! கா ! வென்று பிரமித்து மரம்போல் அசைவற்று நின்றார்கள்.

முன்னாளிரவு எந்திரத்திற்குக் கயிறு பூட்டிய மணவாளன் களைப்பினால் படிகள் விழாது தடுக்கும் மரையாணிகளை முடுக்காது மறந்து விட்டான். அது பிரபுவிற்குத் தெரியாது. அவன் முடுக்கி இருப்பானென்றே அவர் நம்பியிருந்தார்.

28-வது அத்தியாயம்

அறையில் சந்தித்த காதல ரிருவரும் அனேக விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டி யிருந்தது. திரவியசிங்கம் பிரபு தன்னிடம் சிகைத்துண்டைக் கொண்டுவந்து கொடுத்ததையும், பிறகு அவர் சிறையாக்கப் பட்டதும், பலராமனிட மிருந்து இராணியின் பத்திரமகப்பட்டதும், தான் அதை எடுத்துக்கொண்டு யாவர்க்கும் தெரியாமல் புறப்படத் தீர்மானித்து வீட்டு வேலைக்காரனான கிழவனைத் துணை வரும்படி வேண்டிக் கொண்டதும், பலராமன் எப்படியோ அக்கிழவன் உடையை யணிந்துகொண்டு சதிசெய்ததையும், பிறகு கப்பலில் ஒரு அறையில் அடைக்கப்பட் டிருந்தபோது பலராமன் தன் தந்தை யோசனைப்படி தன்னை மிக்க மரியாதையாய் நடத்தினானென்றும், ஏனெனில், அப்படி நடத்தினால் அன்னிய நாட்டில் சென்று மணம் முடித்துக்கொண்டபின் தன் தந்தைக்குத் தெரிவித்தால் எப்படியும் மன்னிப்புப் பெறலாமென்று நம்பினான் என்றும், பிறகு கப்பல் ஆபத்தில் சிக்கியபோது தன்னை ஒரு கட்டுமரத்தில் கட்டிக் கரைக்குக் கொண்டுவர முயன்றானென்றும், யாவும் கமலாம்பாள் தன் காதலனுக்கு விவரமாகக் கூறினாள். சகோதரர்க ளாகிய வாலிபப் பிரபுக்களால்தான் பலராமன் கற்கோட்டையில் வேலைக்காரனைக் கொல்ல முயன்ற சங்கதி தெரிந்தது.

(தொடரும்)

ஆரணி - குப்புசாமி முதலியார்.

" ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

சித்தார்த்தி ௵ மார்கழி௴—சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020

பசலி 1328-29—கோல்லம் 1094-95 - ஹிஜரி-1338-

இங்கிலீஷ் 1920-ம் ௵ டிசம்பர்௴—ஜனவரி௴

மார்கழி௴	டிசம்பர்௴	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	16	செ	தச-60-0	அஸ்-21-36	சித்த-60	தர்ப்பணபுண்ணியகாலம்
2	17	பு	தச-1-9	சித்-27-17	சித்த-60	ஔஷதம் செய்ய
3	18	வி	ஏ-4-57	சுவா-32-38	அ-32 சி	மத்வராமாநுஜ ஏகாதசி
4	19	வெ	து-9-41	விசா-83-39	சித்த-60	தான்யங்கள் அறுக்க
5	20	ச	திர-14-48	அனு-46-52	சித்த-60	மேற்கே பிரயாணம்
6	21	ஞா	ச-20-6	கேட்-51-23	ம-51 அ	கரிநாள்
7	22	தி	●-25-9	மூல-57-22	சித்த-60	அமாவாசை
8	23	செ	பிர-29-36	பூரா-60-0	சித்த-60	கரும்பு வெட்ட, விற்க
9	24	பு	து-33-4	பூரா-2-35	அ-3 சி	கரிநாள்
10	25	வி	தி-35-28	உத்-6-44	சித்த-60	சீமந்தம், கர்ணவேதை
11	26	வெ	ச-36-37	திரு-9-45	ம-10-சித்	கரிநாள்
12	27	ச	ப-36-23	அவி-11-33	சி-11 அ	வடக்கே பிரயாணம்
13	28	ஞா	ஷ-34-58	சத-12-5	சித்த-60	பூமிகொள்ள
14	29	தி	சப்-32-25	பூர-11-30	ம-12 சி	கோடியுடுக்க
15	30	செ	அ-28-51	உத்-9-52	அ-10 சி	கிழக்கே பிரயாணம்
16	31	பு	நவ-21-2?	ரே-7-20	ம-60	....
17	1921 ௵ ஜனவரி௴ 1	வி	தச-19-25	அசு-4-10	அ-43 சி	இராஜ தரிசனம்
18	2	வெ	ஏ-13-57	கிரு-55-56	சி-57 ம	வைகுண்ட ஏகாதசி
19	3	ச	து-8-12	ரோ-52-19	அ-52 சி	நவதான்யங்கள் இருப்பு
20	4	ஞா	ச-54-16	மிரு-48-49	சித்த-60	புஞ்சை உழ [வைக்க
21	5	தி	○-51-20	திரு-44-38	சி-44 அ	ஆருத்ரா தர்சனம்
22	6	செ	பிர46-22	புன-41-23	சி-60	கிழங்குகள் வெட்ட
23	7	பு	து-42-18	பூச-38-51	சி-60	
24	8	வி	தி-39-2	ஆயி-37-6	சி-37 அ	
25	9	வெ	ச-36-53	மக-36-28	ம-36 சி	
26	10	ச	ப-35-53	பூர-36-56	சி-37 அ	
27	11	ஞா	ஷ-36-5	உத்-38-35	அ-60	
28	12	தி	சப்-37-36	அஸ்-41-31	சி-60	
29	13	செ	அ-40-21	சித்-45-38	சி-60	

	கே		
	16-த-பு 14-வி-சு		குரு
			சனி
ர	பு	சு-ரா	செ.

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
"ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.